விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

நாவாந்துறை கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (03.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

## இராணுவ வீரர் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - மணலாறு பிரதான வீதி சந்தி தரைப்படை முகாமில் இராணுவ வீரர் ஒருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சடலம் முல்லைத்தீவு மாவட்டவைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக் 23

## கொக்காவில் விபத்து
## சம்பவ இடத்தில் ஒருவர் பலி

(பனிக்கன்குளம்)

கொக்காவில் பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. கொக்காவில் பகுதியிலிருந்த பழைய முறிகண்டியிலுள்ள தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தவரை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பழைய முறிகண்டி பனிக்கன்குளத்தை சேர்ந்த அ.பிரதாஸ் (வயது - 28) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந் 23

## "புதிய அரசியலமைப்பிற்கு தீ வைத்து தடுப்போம்"
## – விமல் வீரவன்ச

(கொழும்பு)

நாட்டை பிளவுபடுத்தி மாகாண சபைகளை அரசாங்கத்தின் பிடியில் இருந்து நீக்கும் அரசியல் அமைப்பே அரசாங்கத்தினால் கொண்டு வரப்படுகின்றது.


புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டால் மாகாணங்களின் எல்லைதாண்டிய போக்கினை மத்திய அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு 23

# பௌத்தபிக்கு மீது கை வைத்தால்
# நாட்டில் கலவரங்கள் வெடிக்கும்
## சிங்கள ராவய எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கமானது பௌத்த பிக்குகளை கைது செய்யும் பழிவாங்கும் படலத்தை நிறுத்தாவிட்டால் சமூகத்தில் ஏற்படும் கலவரங்களை நீதிமன்றங்களாலும் தடுக்க முடியாது என சிங்கள ராவய அமைப்பின் முன்னாள் பொதுச்செயலாளர் மெடில்லே பஞ்ஞாலோக தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)




## ஆமைகளுடன் ஒருவர் கைது



(இளவாலை)

இறைச்சிக்காக கடல் ஆமைகளை உரப்பையில் மறைத்துக் கொண்டுசென்ற நபரை நேற்று செவ்வாய்க்கிழமை 23

## வாள்வெட்டு
## தாயும் மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குடும்ப தகராறு காரணமாக வாள்வெட்டுக்கு இலக்காகி தாயும் மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.00 மணி 23

## இரவு நேரங்களில் வீதிகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இரவு நேரங்களில் சட்டவிரோதமாக வீதிகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் கைதுசெய்யப்பட வேண்டுமென யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்றையதினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் கருத்து தெரிவித்து அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் மேற்குறித்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் பல முறை பொலிஸாருக்கு தெரியப் படுத்திய போதும் காத்திரமான நடவடிக்கை எடுத்ததாக தெரிய 23

## ஹெரோயினுடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த நான்கு இளைஞர்கள் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றையதினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், நின்றிருந்த நான்கு இளைஞர்கள் 9 23

## இடைக்கால அறிக்கையினை நிதானமாக கையாள வேண்டும்
## பேராசிரியர் கீதபொன்கலன்

(கொழும்பு)

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையினை தமிழ் மக்கள் நிதானமாக கையாள வேண்டும் எனவும் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றது என்ற காரணத்திற்காக அதனை முழுமையாக நிராகரித்துவிட வேண்டிய அவசிய மில்லை என்றும் பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன் தெரிவித்துள்ளார். புதிய அரசியலமைப்பிற்கான வழிநடத் 23

## லாஸ் வெகாஸில் பயங்கரம்; 50 பேர் பலி; 200 பேர் காயம்



## மோட்டார் சைக்கிள் – பிக்கப் விபத்து
## இளைஞன் உயிரிழப்பு



(பனிக்கன்குளம்)

மோட்டார் சைக்கிளும் பிக்கப் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர் மேலதிக சிகிச்சைக்காக 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் செந்தில்வேல் சந்திரமணி

இறை அருள் கொண்ட என் தாயே இரக்கப்படா இறைவனும் உன்னை எடுத்து விட்டான். விண்ணுலகத்தில் தெய்வத்தின் இறக்கையுள் உங்களை சேர்க்க. என் சந்தோஷ இறக்கையை உடைத்து விட்டானே!

கடந்த 03.09.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி **செந்தில்வேல் சந்திரமணி** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.71, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-9848)

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்**

# மோட்டார் சைக்கிள் - ஆட்டோ விபத்து ; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்வம் நேற்று காலை 8.30 மணியளவில் A9 வீதி அரியாலை புங்கன்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அரியாலையை சேர்ந்த ச.அனோஜன் (வயது 19) மற்றும் பூநகரியை சேர்ந்த க.தன்சன் அனிஸ்ரன் (வயது 39) என்ற இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

விபத்துக்குள்ளான ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளை யாழ்ப்பாண பொலிஸார் கைப்பற்றியதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-10-30)

# நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொலை சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்களின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று யாழ்.நீதவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய விசாரணையின் போது குற்றப புலனாய்வுப் பிரிவினரும், இருதரப்பு சட்டத்தரணிகளும் மன்றில் ஆஜராகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன கடந்த ஜூலை மாதம 22 ஆம் திகதி நல்லூர் பின்வீதியில் காரில் சென்று கொண்டிருந்த போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர உயிரிழந்ததுடன், மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

# வித்தியா படுகொலை தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பாகும்

## ஜனாதிபதி மைத்திபால சிறிசேன

மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இந்த நாட்டின் மிக முக்கியமான தீர்ப்பாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பாகும. அனைத்திற்கும் மேலாக மதிக்கப்பட வேண்டிய தீர்ப்பாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அனைத்துலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் விசேட நிகழ்வுகள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றிருந்தன. இதன்போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (மு-11)


# கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட

# ஜனா டிஜிற்றல் பிறிண்டிங் அன் திருமண அழைப்பிதழ்கள்

**விசேட விலைச் சலுகை: 03.10.2017 - 13.10.2017**

| | |
|---|---|
| Banner printing | : 30/= |
| Sticker printing | : 70/= |
| Backlit printing | : 70/= |
| Clear sticker printing | : 70/= |
| Normal Board | : 200/= |
| With out steel | : 150/= |
| Light Board | : 450/= |






Special Offer

**Mug Printing : 250/=**

(C-9849)

**இல.10, கந்தசுவாமி கோவிலடி,**
**கிளிநொச்சி.**
**தொ.பே: 071 211 5533**

Digital Printing

**இல.252, கஸ்தூரியார் வீதி,**
**கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.**
**தொ. பே: 021 221 3233**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் பிரதிநிதிகளுக்கு ஆர்வமில்லை

## அரச அதிகாரிகள் விசனம்



யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாததனால் அதிகாரிகள் விசனம் வெளியிட்டிருந்தனர். பொதுமக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் அரசியல்வாதிகளுக்கு ஆர்வமில்லை எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலுக்கு மக்கள் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் என பலரையும் அழைப்பது வழமை. இக் கூட்டத்தில் எமது பிரதேசங்களில் இடம் பெறும் சட்டவிரோத செயற்பாடுகள், குற்றச்செயல்கள், பொலிஸ் சேவையின் மற்றும் குறைபாடுகள், பொது மக்களுக்கு தேவையான நிறைவான சேவைகள் என பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மற்றும் புதிய நடவடிக்கைகள் என்பன மேற்கொள்வதற்கான முடிவுகளும் எடுக்கப்படுவது வழக்கமாகவுள்ளது.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தின் ஆரம்ப நேரம் காலை 9.30 மணிக்கு மிகவும் குறைந் தளவு அதிகாரிகளே வருகை தந்திருந்தனர். கூட்டம் ஆரம்பித்து ஒரு மணி நேரத்தின் பின்னர் மேலும் ஒரு சில மக்கள் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும், பிரதேச செயலர்களும், ஒரு சில திணைக்கள அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் மட்டுமே கலந்துகொண்டிருந்தனர். இது தொடர்பில் அங்கு கலந்து கொண்ட அரச அதிகாரிகள் சிலர் விசனம் வெளியிட்டிருந்தனர். (இ-9)

# போக்குவரத்து சீரின்மையால் போக்கருப்பு மக்கள் அவதி



மருதங்கேணிபிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட வடமராட்சிக் கிழக்கு போக்கருப்பு மக்கள் சீரான போக்குவரத்து வசதி இன்மையால் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

பருத்தித்துறையிலிருந்து கேவில் வரையும் யாழ்ப்பாணத்திலிருந்து கேவில் வரை செல்ல வேண்டிய இலங்கை போக்குவரத்துசபைக்குச் சொந்தமான பேருந்துகள் வடமராட்சி கட்டைக்காட்டுடன் இடை நிறுத்தப்படுவதால் கட்டைக் காட்டிலிருந்து கேவில் வரையிலான சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து செல்வதாகவும் இது தொடர்பில் மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை உரிய நடவடிக்கையெடுக்காதது வருத்தமளிப்பதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள போக்கருப்பு பிரதேச மக்களின் போக்குவரத்து பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-64)

# ஆயிரம் தமிழ் பொலிஸார் வடக்கிற்கு உடன் தேவை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வடக்கு மாகாண மக்களுக்கு நிறைவான சேவையை வழங்க குறைந்தது ஆயிரம் தமிழ் பொலிஸார் உடனடியாகத் தேவை என வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்பொலிஸார் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

எமது பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் தான் முன்வர வேண்டும். வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸார் இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. குறிப்பாக பெண்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் விசாரிப்பதிலும் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே வடக்கில் தமிழ் பொலிஸாரின் தேவை அவசர தேவையாகவுள்ளது. ஜனவரி மாதம் ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளது. குறைந்தது ஆயிரம் பொலிஸாரேனும் தேவையாகவுள்ளது.

இம்முறைபொலிஸ்சேவையில் இணைந்து கொள்பவர்களுக்குரிய பயிற்சிகள் வடக்கில் காங்கேசன்துறை பகுதியில் இடம்பெறவுள்ளது. அவர்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய தேவை இல்லை. அவர்கள் பயிற்சிக்கு வெளியில் செல்லத்தேவையில்லை. எனவே, மிக விரைவாக துணிச்சலுடன் இளைஞர்கள் குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க முன்வர வேண்டும்.

குறிப்பாக பெண்கள் அதிகளவில் விண்ணப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். மாதாந்த ஊதியமாக 55 ஆயிரம் ரூபாய் வரைபெற்றுக்கொள்ள முடியும். எமது மக்களின் முன்னேற்றத்தை, தேவைகளைக் கருத்தில் கொண்டு விரைவாக பொலிஸ் சேவையில் இணையுங்கள். இளைஞர்களை சேவையில் இணைக்க அதிகாரிகளும் விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

# மேடையில் மயங்கி வீழ்ந்து நடன ஆசிரியை மரணம்

சிறுவர் தினத்துக்காக மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்த ஆசிரியை மேடையிலேயே உயிரிழந்தார். மெனிக்திவெல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த தீபா குமாரி குலதுங்க (வயது-45) என்ற ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஆசிரியையின் மரணம் தொடர்பில் உடனடியாக சரியான காரணங்களை கூற முடியாத காரணத்தினால் உடல் பாகங்களை பரிசோதனைக்காக அனுப்பி வைக்குமாறு கண்டி வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எம்.சிவசுப்ரமணியம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, குறித்த ஆசிரியையின் மரணத்திற்கான காரணங்கள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. இந்த ஆசிரியை புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும், நீண்ட காலம் சிகிச்சை பெற்று வந்தார் என தெரிவிக்கப்படுகிறது. புற்று நோய் காரணமாக ஆசிரியை உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

உடலை வருத்தி வேலை செய்ய வேண்டாம் என இந்த ஆசிரியைக்கு ஆலோசனை வழங்கப்பட்ட நிலையில் நடனம் பயிற்றுவித்துக் கொண்டிருந்த போது அதே மேடையில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரக்பி பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவன் மயங்கி விழுந்து மரணம்

ரக்பி பயிற்சியில் ஈடுபட்டுவந்த வேளையில் தவறி விழுந்து மாணவன் உயிரிழந்த பரிதாபச் சம்பவமொன்று கண்டியில் இடம்பெற்றுள்ளது.

கண்டி திரித்துவக் கல்லூரி மாணவனான பாத்திய ஏக்கநாயக்க (வயது-18) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



குறித்த மாணவன் நேற்று முன்தினம் பல்லேகலை விளையாட்டு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்ட வேளை மயக்கமுற்று விழுந்துள்ளார். இதனை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# சிறுவர்கள் தொடர்பாக அரசு அதிக அக்கறை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களினால் சிறுவர்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள பிரகடனங்களுக்கு அமைவாக செயற்படும் அதே நேரம், அவற்றிற்கு அப்பாலும் விரிவான பல செயற்பாடுகளை எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுரக்ஷா காப்புறுதி திட்டத்தினை மாணவர்களிடம் கையளிக்கும் தேசிய நிகழ்வு நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றவேளை அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



[illegible]

கத்தின் நன்மைக்காக கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்படும் மருத்துவ மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டமான சுரக்ஷா காப்புறுதித் திட்டமானது, "தேசத்தின் எதிர்கால தலைமுறையை என்றும் காப்போம்" எனும் தொனிப்பொருளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைகளுக்கமைவாக கடந்த இரண்டரை வருட காலத்திற்குள் அரசாங்க நிதியை மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டங்கள் பலவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

11,242 பாடசாலைகளை சேர்ந்த 45 இலட்சம் மாணவர்களை 24 மணி நேரமும் உள்ளடக்கும் வகையில் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பல வரப்பிரசாதங்களை வழங்க கல்வி அமைச்சும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மாணவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல், தனது குடும்பத்தினதும் சமூகத்தினதும் சுகாதாரத்தை மேம்படுத்த தன்னாற்றல் உடையவர்களாக மாணவர்களை வலுப்படுத்தல் மற்றும் கல்வி சார்ந்த வாய்ப்புக்களில் உச்ச பயனைப்பெறத் திட்டமிடல் என்பன இதன் நோக்கமாகும். காப்புறுதித்திட்டம் வழங்குவதை ஆரம்பித்து வைக்கும் வகையில் சில பிக்கு மாணவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இதன்போது ஜனாதிபதியால் காப்புறுதி அட்டை வழங்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழல்பந்து சுப்பர் ஸ்ரார் ஹெரத் 400 விக்கெட்டுக்களை கைப்பற்றி முத்திரை பதிக்க

# பரபரப்பான அபு தாபி டெஸ்டில் இலங்கை வியத்தகு வெற்றி



இலங்கையின் சுழல்பந்து சுப்பர் ஸ்ரார் ரங்கன ஹெரத்தின் மிரட்டலான சுழல் பந்துவீச்சு கைகொடுக்க பரபரப்பான அபுதாபி டெஸ்டில் இலங்கை அணி 21 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடர் தோல்விகளிலிருந்து மீண்டெழுந்தது.

இப்போட்டியில் 136 ஓட்டங்களுக்கு 11 விக்கெட்டுக்களை கைப்பற்றி அசத்திய ஹெரத், டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுக்களை கைப்பற்றிய முதல் இடது கை சுழல்பந்து வீச்சாளர் என்ற சாதனையும் படைத்தார்.

போட்டியின் முதல் மூன்றரை நாட்களும் துடுப்பாட்டத்துக்கு சொர்க்கபுரியாக திகழ்ந்த அபு தாபி மண், இறுதி நாட்களில் சுழலுக்கு சாதகமாக மாறி போட்டியின் முடிவையும் தலைகீழாக மாற்றி இரசிகர்களை பிரம்மிக்க வைத்தது.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் மோதுகிறது.

இத்தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி அபுதாபியில் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, அணித் தலைவர் டினேஸ் சண்டிமலின் (155*) சதத்தின் உதவியுடன் தனது முதல் இன்னிங்ஸில் 419 ஓட்டங்களை குவித்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் 422 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அசார் அலி 85, ஹரிஸ் சொகைல் 76 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ஹெரத் 93 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

3 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**யசிர் அபாரம்**

நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணியின் குசல் மெண்டிஸ் (18), சுரங்க லக்மல் (13), மொஹமட் அபாஸ் பந்தில் ஆட்டமிழந்தனர். யசிர் ஷா 'சுழலில்' டில்ருவன் பெரேரா (6), ஹெரத் (0), லக்சன் சண்டகன் (8) சிக்கினர். ஹசன் அலியிடம நுவான் பிரதீப் (0) சரணடைந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் யசிர் ஷா 51 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**ஹெரத் அசத்தல்**

136 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு சமி அஸ்லாம் (2), அசார் அலி (0) ஏமாற்றினர். டில்ருவன் பெரேரா பந்தில் ஷான் மசூத் (7), பாபர் அஸம் (3) ஆட்டமிழந்தனர். ஹெரத் 'சுழலில்' அசாத் ஷபிக் (20), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (19) சிக்கினர். ஹரிஸ் சொகைல் (34) ஆறுதல் தந்தார். அடுத்து வந்த ஹசன் அலி (8), மொஹமட் அமிர் (9), மொஹமட் அபாஸ் (0), ஹெரத்திடம் சரண்டராகினர்.

இரண்டாவது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 114 ஓட்டங்களுக்கு சுருண்டு, 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. யசிர் ஷா (6) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ஹெரத் 43 ஓட்டங்களுக்கு 6, டில்ருவன் பெரேரா 3, லக்மல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் (5+6) பந்துவீச்சில் அசத்திய இலங்கையின் ஹெரத் தெரிவா னார்.

இந்த வெற்றியின்மூலம், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 6ஆம் திகதி டுபாயில் தொடங்குகிறது.

**400 விக்கெட்டுக்கள்**

பாகிஸ்தானின் மொஹமட் அபாசை ஆட்டமிழக்கச் செய்த இலங்கையின் ஹெரத் தனது 400ஆவது டெஸ்ட் விக் கெட்டை (84 போட்டி) பதிவு செய்தார். இதன்மூலம், டெஸ்ட் அரங்கில் இந்த மைல் கல்லை எட்டிய முதல் இடதுகை சுழற்பந்து வீச்சாளரானார்.

தவிர, இந்த இலக்கை அடைந்த 14ஆவது சர்வதேச வீரர், 2வது இலங்கை வீரரானார். முதலிடத்தில் இலங்கையின் முரளிதரன் (800 விக்கெட்டுக்கள், 133 போட்டிகள்) உள்ளார்.

**முதல் வெற்றி**

சமீபத்தில் இந்தியாவிடம் 3 டெஸ்ட், 5 ஒருநாள், ஒரு 'இருபது-20' என தொடர்ந்து 9 சர்வதேச போட்டிகளில் தோல்வியடைந்த இலங்கை அணி, நேற்று பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றிப் பாதைக்கு திரும்பியுள்ளது.

# தென்னாபிரிக்கா இமாலய வெற்றி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் தென்னாபிரிக்க அணி 333 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டி செப்ஸ்டிஷரூம் நகரில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 496/3 (டிக்ளேர்), பங்களாதேஷ் 320 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 247/6 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தது.

424 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி, நேற்றைய 4ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணிக்கு ரபாடா தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் (16), மகமதுல்லா (6), லிட்டன் தாஸ் (4) வெளியேறினர். மகராஜ் 'சுழலில்' சபிர் ரஹ்மான் (4), டஸ்கின் அகமட் (4), முஷ்தபிசுர் ரஹ்மான் (1) சிக்கினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 90 ஓட்டங்களுக்கு சுருண்டு 333 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மகராஜ் 4, ரபாடா 3, மோர்னே மோர்கல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



போட்டியின் ஆட்டநாயகன் விருதை தென்னாபிரிக்காவின் டீன் எல்கர் வென்றார்.

இந்த வெற்றியின்மூலம், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 6ஆம் திகதி புளோயம்பொன்டைனில் ஆரம்பமாகிறது.

# கொக்குவில் தாக்குதல் இருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் இரவு தாக்கிய சம்பவம் தொடர்பாக கொக்குவிலை சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்றைய தினம் மாலை யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு 3 மோட்டார் சைக்கிளில் ஆயுதங்களுடன் வந்த இளைஞர் குழுவினர் அக் கடை மீது சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டதுடன் கடையின் முன் பகுதிகளை வாள்கள் கம்பிகளால் தாக்கி விட்டு சில கைத்தொலை பேசிகளையும் திருடிக்கொண்டு தப்பி சென்றிருந்தனர்.

இச் சம்பவம் குறித்த கடைக்கு அருகில் இருந்த சிசிரிவி கமெராவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த வீடியோ-பதிவு தொடர்பில் விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையிலேயே குறித்த இரு இளைஞர்களும் பொலிஸாரால் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். (மு-9)

# உடல் சோர்வடைந்த நிலையில் 9ஆவது நாளாக உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

உடல் சோர்வடைந்த நிலையிலும் 9 ஆவது நாளாக நேற்றைய தினம்தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகளும் மேற்கொண்டுள்ளனர்.

அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக ஏனைய அரசியல் கைதிகள் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

மேற்குறித்த அரசியல் கைதிகள் மூவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தற்போது அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளனர்.

மொழிப்பிரச்சனை உள்ள காரணத்தினால் தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

நேற்றைய தினம் இவர்களுக்கு அநுராதபுரம் சிறைச்சாலையில் வழக்குக்கான திகதி இடப்பட்டிருந்து இவர்களின் உடல் நிலை மோசமாக உள்ள காரணத்தினால் இவர்கள் நீதிமன்றுக்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் காந்தி ஜெயந்தி தின நிகழ்வு நேற்றுக்காலை யாழில் இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சிலையடியில் முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் என்.நடராஜன் மற்றும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த பேராசிரியர் கலாநிதி கு.ஞானசம்பந்தன், கல்வியாளர்கள் மற்றும் மதத்தலைவர்கள் காந்தி சிலைக்கு மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து மதகுருமார்கள் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் மலர்தூபி அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:-உ.சாளின்)

# கடந்த 5 ஆண்டுகளில் கிழக்கு மாகாண சபை

## —ஓர் பார்வை—

கிழக்கு மாகாண சபையின் 5 ஆண்டு பதவிக்காலம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்த நிலையில் சபை உறுப்பினர்களில் ஒருவரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் இரண்டு ஆண்டுகளை, சிறையிலே கழித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டின் பேரிலே கைதாகி நீதிமன்ற உத்தரவின் பேரில் மட்டக்களப்பு சிறையில் வைக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் என்ற அடையாளத்தை பெற்றுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன், 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதியன்று குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இவர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவருக்கு மாகாண சபை அமர்வுகளில் கலந்து கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது. அமர்வு நடைபெறும் நாட்களில் சிறை அதிகாரிகளினால் அழைத்து வரப்படும் இவர் அமர்வு முடிந்த பின்னர் மீண்டும் அழைத்துச்செல்லப்படுவார்.

இறுதியாக கடந்த திங்கட்கிழமை அமர்வில் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டார். வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 14 உறுப்பினர்களை பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்து ஆட்சியை அமைத்துக் கொண்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு -11 பேர் , ஐக்கிய தேசியக் கட்சி -4பேர், தேசிய சுதந்திர முன்னணி- ஒருவர் என்ற எண்ணிக்கையில் ஏனையோர் தேர்வாகியிருந்தனர். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நஜீப் ஏ.மஜீத் முதலமைச்சரானார். 5 பேர் கொண்ட அமைச்சர்கள் வாரியத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த இருவர் உள்ளிட்ட நான்கு முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் இடம்பெற்றிருந்தனர்.

இவ்வேளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பொறுப்பில் இருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட இரு தமிழர்கள் தேர்வாகியிருந்தாலும் தமிழர்களுக்கு அதில் இடமளிக்கப்படவில்லை.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார். இதனையடுத்து மத்திய அரசில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பொறுப்பும் மைத்திரிபால சிறிசேனவிடம் மாறியது.

அதே ஆண்டு ஏப்ரல் மாதம் கிழக்கு மாகாண சபை ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்ததாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மாகாண முதலமைச்சராக ஹபிஸ் நசீர் அஹமட் தேர்வானார்.

முதலமைச்சர் உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த இருவர் (முஸ்லிம்கள்), தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இருவர் (தமிழர்கள்), ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒருவர் (சிங்களவர்) என அமைச்சர்கள் வாரியம் மாற்றியமைக்கப்பட்டது.

இரு தமிழர்களுக்கு அதில் இடமளிக்கப்பட்ட நிலையில் முஸ்லிம் அமைச்சர்களின் எண்ணிக்கை 2 ஆகக்குறைந்தது. ஏற்கனவே முதலமைச்சராகவிருந்த நஜீப் ஏ.மஜித், அமைச்சராகவிருந்த எம்.எஸ்.உதுமாலெப்பை ஆகியோருக்கு அதில் இடமளிக்கப்படவில்லை.

கிழக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தலிலே தெரிவாகி முதலாவது பெண் உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றவர் ஆரியவதி கலப்பதி. கலைக்கப்பட்ட மாகாண சபையின் முதல் பகுதியில் முதலாவது பெண் அவைத் தலைவர் என்ற அடையாளத்தை பெற்றிருந்தார். 2015 இல் இடம்பெற்ற அமைச்சர்கள் வாரிய மாற்றத்தின் போது முதலாவது பெண் அமைச்சரானார்.

மாகாண ஆளும் தரப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எதிர்க்கட்சியிலும் மாற்றம் ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உட்பட சிலர் தனித்து இயங்க முடிவு செய்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டனர்.

எதிர்க்கட்சி தலைவராகவிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினரான சி. தண்டாயுதபாணி அமைச்சரான நிலையில் ஏற்கனவே அமைச்சராகவிருந்த எம்.எஸ்.உதுமாலெப்பை எதிர்க்கட்சி தலைவரானார்.

2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாண தேர்தலில் தேர்வான உறுப்பினர்களில் 10 இற்கும் மேற்பட்டவர்கள் 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டனர். விமலவீர திஸாநாயக்கா, எம்.ஐ.எம். மன்சூர், தயா கமகே,இம்ரான் மஹ்றூப் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்வாகினர். இவர்களில் தயா கமமே அமைச்சராகவும் பதவி வகிக்கின்றார்.

சனிக்கிழமை நள்ளிரவுடன் பதவிக் காலம் முடிவடைந்த கிழக்கு மாகாண சபையின் 86 கூட்டத் தொடர்கள் இதுவரையில் நடைபெற்றுள்ளன. குறிப்பாக மாதத்தில் இரு நாட்கள் தொடர்ச்சியான அமர்வு என நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டிருந்தாலும் அநேகமாக ஒரு நாளுடன் அமர்வு முடிவடைந்தது.

அரசியலமைப்பு 13 ஆவது திருத்தத்தின் கீழ் சபையொன்றின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். முதலாவது கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து அது கணக்கிடப்படுகின்றது. மாகாண சபையின் முதலாவது கூட்டம் 2012 ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெற்ற நிலையில் சனிக்கிழமை நள்ளிரவுடன் கிழக்கு மாகாண சபை கலைந்தது. அடுத்த சபை கூடும் வரை ஆளுநரின் கீழ் நிர்வாகம் இருக்கும். மாகாண சபை கலைந் தாலும் அரசியலமைப்பு 13 ஆவது திருத்தம் பிரகாரம் அடுத்த சபை அமையும் வரை அவைத் தலைவர் சந்திரதாஸ கலப்பதி மட்டும் தொடர்ந்து பதவியில் இருப்பார். (இ-7)

# இராசி பலன்

03.10.2017
(புரட்டாதி 17, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 1.51 மணிவரை
சதயம் முன்னிரவு 9.40 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

பிரதோச வரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | ராகு |
| கேது | | | செவ், சுக் |
| | சனி | குரு | சூரி, புத |

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், காரிய அனுகூலமுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**கன்னி:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், சகோதர வழியில் உதவியுண்டு.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், பணவரவு திருப்தி தரும்.

**கும்பம்:** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆழாகலாம், வருமானம் திருப்தி தரும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணமொன்று ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ். வேலணை ஐயனார் வித்தியாலயத்திற்கு ரூபா இரண்டு இலட்சம் ஒதுக்கியிருந்தார். அதில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு கணனி ஒன்றினையும், மிகுதி ஒரு இலட்சம் ரூபாய்க்கு வகுப்பறைகளுக்குத் தேவையான அலுமாரிகளையும் வழங்கிவைத்தார். இந் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி சுதர்சினி ஜோய்ஸ் நியூட்டன் தலைமையில் நடைபெற்றது.

# விவசாய சம்மேளன பிரதிநிதிகளுடன் துறைசார் அமைச்சர் சிவநேசன் சந்திப்பு





யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் சந்தித்து கலந்துரையாடி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய பயிற்சிக் கல்லூரியில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது விவசாயிகள் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

குறிப்பாக பாரம்பரிய நெல் இனங்களை பயிரிடுகின்ற போது அவற்றுக்கு காப்புறுதி செய்ய முடியாத சூழல் இருப்பதாக தெரிவித்தனர். மேலும் யாழ்ப்பாணத்தின் பணப்பயிரான புகையிலைச் செய்கையை நம்பிக்கையோடு பயிரிடுவதற்கு வழி ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

சுமார் 3 மணித்தியாலங்கள் இடம்பெற்ற கலந்துரையாடலில் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அமைச்சர் சிவநேசன் உரிய திணைக்களங்களூடாக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (இ-4-89)




# நல்லூரிலிருந்து வல்லிபுரத்திற்கு பர்தயாத்திரை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு யாழ். நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்திலிருந்து வல்லிபுர ஆழ்வார் ஆலயம் வரைபுனிததிருத்தலபாதயாத்திரை இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பித்துநாளை 4 ஆம் திகதி புதன்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழாவில் முடிவடையும். (இ-7)

# முழுநிலா நாள் கலைவிழா

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா நாளை மறுதினம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கௌரவ விருந்தினராக இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாண ஆளுநர் கலாநிதி வை.சிவராசாவும் ஏனைய விருந்தினர்களாக யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் அ.கைலாயப்பிள்ளை, யாழ். டிறிபேர்க் கல்லூரி ஓய்வு நிலை அதிபரும், போதைப் பொருள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான அலுவலக உத்தியோகத்தருமான க.அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

# தையல் இயந்திரம் வழங்கல்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் போரில் கணவனை இழந்த முன்னாள் போராளியான பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கு குடும்ப சூழலைக் கருத்தில் கொண்டு சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவியாக 45 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. இதனை சங்க உறுப்பினர்கள் நேரில் சென்று வழங்கி வைத்தனர். (இ-7-104)

# துவிச்சக்கரவண்டி வழங்கல்



மண்டான் கரணவாய் மேற்கைச் சேர்ந்த பாடசாலை மாணவனாகிய ரங்கநாதன் தயாநிதிக்கு வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து துவிச்சக்கரவண்டியை வழங்கி வைத்தார். (இ-60)

# முதலுதவியால் உயிர்பிழைத்த இளைஞன்

## வைத்திய நிபுணர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த 23.09.2017 முற்பகல் 10 மணியளவில் மின்சாரம் தாக்கி சுய நினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட 22 வயது இளைஞன் உயிர் ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டமைக்கு அவருக்கு உடனடியாக வழங்கிய முதலுதவியே காரண்ம் என்று யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் என். சுகந்தன் தெரிவித்தார்.

காலை 9 மணி 50 நிமிடத்துக்கு மின்சாரம் தாக்கி குறித்த இளைஞன் சுய நினைவிழந்திருந்தான். உடல் விறைப்படைந்திருந்தது. அருகிலே கட்டட வேலையில்ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர்கள் உடனடியாக அவருக்கு முதலுதவி யளித்தனர். ஒருவர் இதயத்தை இயங்கச் செய்வதற்கு இதயத்தை சீரான இடைவெளியில் அழுத்திக் கொண்டிருந்தார் அதேவேளை வாயினால் செயற்கைச் சுவாசம் வழங்கிக் கொண்டிருந்தனர்.

முதலுதவியளித்தவாறு ஆட்டோவில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 10 நிமிடத்தில் கொண்டு வரப்பட்டார்.

முற்பகல் 10 மணியளவில் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவ்வேளை அவருக்கு சுவாசம் இருக்கவில்லை. இதயத்துடிப்பும் இல்லாதிருந்தது. உடனடியாக அவருக்கு செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு இதயத்தை இயங்கவைக்க வைத்தியர்களும் தாதியர்களும் 20 நிமிடங்கள் Cardiac Resuscitation செய்தனர். இதயம் இயங்க ஆரம்பித்த பின்னர் அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இவர் ஒருவார காலமாக சிகிச்சைபெற்று கடந்த சனிக்கிழமை வீடு திரும்பியுள்ளார்.

மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி இதயத்துடிப்பு சுவாசம் நின்றபோதும் உடனடியாக செயற்பட்ட இளைஞர்கள் இதயத்தை சீரான இடைவெளியில் அழுத்தி Cardiac Massa ge செய்து குருதிச் சுற்றோட்டத்தை ஏற்படுத்தி இருந்தனர். வாயினால் சுவாச த்தை வழங்கியிருந்தனர். உரிய நேரத்தில் வழங்க்ப்பட்ட முதலுதவியினால வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை வழங்கி இதயத்தை மீள இயங்கச் செய்ய முடிந்தது. முதலுதவி வழங்கப்படாதிருந்தால் குறித்த இளைஞனை காப்பாற்ற முடியாது போயிருக்கலாம். உரிய நேரத்தில் முதலுதவியளித்த இளைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பொதுமக்கள் இத்தகைய நிலைமைகளின் போது முதலுதவி வழங்குவதற்கு அறிந்திருக்க வேண்டும். மாணவர்கள், இளைஞர், யுவதிகள் முறையான முதலுதவிப் பயிற்சி பெற்றிருந்தால் அவசர நிலைகளின் போது உயிர்காப்பதற்கு பேருதவியாக இருக்கும் என்று வைத்திய நிபுணர் என். சுகந்தன் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கடையிற் சுவாமிகளின் 126வது குருபூசை நாளை

(யாழ்ப்பாணம்)

கடையிற் சுவாமிகளின் 126 ஆவது குருபூசைத் திருநாள் நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை நீராவியடியிலுள்ள ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் தேவஸ்தானத்தில் இடம்பெறும். கடையிற் சுவாமிகள் பற்றிய சொற்பொழிவும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (இ-7)

# முதியோர் சங்க நிர்வாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச மட்ட முதியோர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதியோர் சங்கத்தலைவர் அ.இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சமூகத்திற்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டிகளாகவும் முதியோர்கள் இருக்க வேண்டும் எனவும் இளம் சமுதாயத்தினர் தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடாது அறநெறி வகுப்புக்களில் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தவறாது பங்கு கொள்வதற்குரிய விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது என முதியோர் சங்கத் தலைவர் அ.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (இ-7)





கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் 40 இலட்சம் ரூபா செலவில் கலையரங்கு ஒன்றை கடந்த 30 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்காக சிவசூரியகுமரன் (துவராசா) ஞாபகார்த்தமாக அவருடைய மகன் தயாபரன் அமைத்துக் கொடுத்துள்ளார்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

மாணவி வித்தியாவின் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கையில் 04.03.2016 அன்று குற்றத் தடுப்புப் புலனாய்வுத் துறையினர் கொலை தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இதில் வித்தியாவின் கொலைச் சூத்திரதாரிகள், அதற்கு உதவியவர்கள், திட்டம் தீட்டியவர்கள் என்ற வகையில் அந்த அறிக்கை விரிவானதாக இருந்தது.

இதேவேளை வித்தியா கொலை தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுகின்ற சம்பவமும் நடந்து கொண்டிருந்தது. 10 ஆம், 11 ஆம் சந்தேக நபர்கள் எனப் பட்டியல் நீண்டு செல்கிறது.

தொடர்ந்து 20.04.2016 அன்று வித்தியாவின் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்ற போது குற்றவாளிகளின் மரபணுச் சோதனை அறிக்கை இன்னமும் தம்மிடம் தரவில்லை என்றும் மரபணுப் பரிசோதனையைச் செய்வதற்கு ஜின்ரெக் என்ற நிறுவனம் பொறுப்பேற்றிருந்ததையும் பொலிஸார் மன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

பொலிஸாரின் கருத்துத் தொடர்பில் கவனம் செலுத்திய ஊர்காவற்றுறை நீதிபதி, ஜின்ரெக் நிறுவன அதிகாரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

நிலைமை இவ்வாறிருக்க வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற வகையில் சுவிஸ்குமார் தொடர் பில் பலரும் கவனம் செலுத்தியிருந்தனர்.



## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

வித்தியாவின் கொலை என்றவுடன் சுவிஸ்குமார் என்ற பெயர் இயல்பாகவே பேசப்படுமளவிற்கு அந்தப் பெயர் முதன்மை பெற்றிருந்தது.

இவ்வாறு பிரபல்யமான அவருடன் தொடர்புடையவர்கள், அவர் யாருடனெல்லாம் உறவைப் பேணியிருந்தார் என்ற விபரங்கள் மீது உன்னிப்பாகக் கவனம் செலுத்தி அறிக்கை தருமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி றியால் குற்றப் புலனாய்வுப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு 09.05.2016 இல் விடுக்கப்பட்டது. தொடர்ந்து 18.05.2016 அன்று குற்றவாளிகளின் மரபணுச் சோதனை அறிக்கை நீதிமன்றில் கையளிக்கப்பட்டது.

அதாவது 13.05.2015 இல் மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ள நிலையில் ஒரு வருட முடிவில் மரபணுச் சோதனை அறிக்கை நீதிமன்றில் கிடைத்தது எனில் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகள் காலதாமதமாவதன் பின்னணியில் இருக்கக்கூடிய காரணங்களை அறிந்து கொள்ள முடியும் எனலாம்.

இவை ஒருபுறம் இருக்க, வித்தியாவின் தாயாரை சுவிஸ்குமாரின் தாய் மிரட்டியதாக தெரிவிக்கப்பட்டு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இம்முறைப்பாட்டையடுத்து சுவிஸ்குமாரின் தாய் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றார்.

விளக்கமறியலில் இருந்த சுவிஸ்குமாரின் தாய் திடீர் சுகவீனமுற்று சிறையிலேயே இறந்து போனார்.

இச்சம்பவம் 18.07.2016 அன்று நடந்தேறியது. சிறைச் சாலையில் இறந்த தாயின் இறுதிக் கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றபோது அதில் பங்கேற்பதற்காக சுவிஸ்குமாருக்கும் அவரது சகோதரனுக்கும் அனுமதி வழங்கப்பட் டது.

23.07.2016 இல் வித்தியா கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது வித்தியா கொலை தொடர்பான விசாரணை அறிக்கைகள் யாவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

ஆக, மாணவி வித்தியாவின் கொலை தொடர்பிலான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான மேலதிக நடவடிக்கையை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடத் தயாரானது.

(வளரும்)



-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா-மன்னார் வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## இரண்டரை மணிநேரம் வரை போக்குவரத்து தடைப்பட்டது

(குருமன்காடு)

வவுனியா -மன்னார் வீதியில் பூவரசன்குளம் சந்தியில் வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இதனால் மன்னார் - வவுனியா வீதியூடான போக்குவரத்தும், செட்டிகுளம் - வவுனியா பூவரசன்குளம் ஊடான போக்குவரத்தும் சுமார் இரண்டரை மணித்தியாலம் வரை தடைப்பட்டிருந்தது.



பூவரசன்குளத்தில் இருந்து இலுப்பைக்குளம் செல்லும் வீதியைப் பயன்படுத்தும் வேலங்குளம், மடுக்குளம், சின்னத்தம்பனை, வலையங்கட்டு, விளாத்திக்குளம், கோயில்மோட்டை கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் அப்பாதையை புனரமைத்துத் தருமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் இரணை இலுப்பைக்குளம் செல்லும் வீதியில் ஒன்றுகூடிய பொது மக்கள் அச் சந்தியில் சுமார் அரை மணி நேரம் வீதி மறியல் போராட்டத்தை மேற்கொண்டதுடன், அங்கிருந்து ஊர்வலமாக பூவரசன்குளம் சந்திக்குச் சென்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வவுனியா - மன்னார் வீதி, வவுனியா - செட்டிகுளம், பூவரசன்குளம் ஊடான வீதி என்பன சுமார் இரண்டரை மணிநேரம் வரை போக்குவரத்து தடை ஏற்பட்டது.

மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பயணித்த பேருந்துகள், அரச வேலைக்குச் சென்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாது நீண்டநேரமாக காத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

பூவரசன்குளம் - இரணை இலுப்பக்குளம் வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாதுள்ளது. இதனை திருத்தித்தருமாறு பல தடவை ஆர்ப்பாட்டம் செய்தும் இதுவரை எந்த தீர்வும் எட்டப்படவில்லை. வீதி சீரில்லாமையால் எமது பகுதிக்கான பேருந்து போக்குவரத்துக் கூட சீராக நடைபெறவில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. காலையில் வெள்ளைச் சீருடையுடன் செல்லும் மாணவர்கள் வீடு வரும் போது அழுக்கு உடையுடனேயே வர வேண்டியுள்ளது. வீதியில் உள்ள தூசி அனைத்தும் மாணவர்களின் சீருடையிலேயே ஒட்டிக் கொள்கிறது. இதனால் நோயாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் என அப்பகுதி மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். எமது தேவைகளை பூர்த்தி செய்வார்கள் எனக் கருதியே மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்தோம். ஆனால் அவர்களே இன்று இதனைக் கண்டு கொள்ளவில்லை. பாதை திருத்தாத பட்சத்தில் நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், பிரதேச செயலாளர் கா.உதயராசா, பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிசோர், வீதி அபிவிருத்தி சபை அதிகாரிகள், பொலிஸார் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுக்களை நடத்தினர். இதன் போது மக்கள் பிரதிநிதி களுக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலையும் ஏற்பட்டது. இருப்பினும் அங்கு வந்த மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் வீதியைப் பயணிக்கக் கூடிய வகையில் உடனடியாக திருத்த நடவடிக்கை எடுப்பதாக வழங்கிய உறுதி மொழியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டு போக்குவரத்து இயல்புக்கு திரும்பியது. (2-250)

# உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் முதலாவது தேசிய அமர்வு





உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் முதலாவது தேசிய அமர்வு நேற்று கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஒன்றியத்தின் வடக்கு மாகாண தலைவர் மாவட்ட இணைப்பாளர் எம்.தனுசன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வமர்வின் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் ஏ.ஜோன்சன்,ஒன்றிய ஆலோசகர் எம்.ஈசன், வடகிழக்கு பகுதிகளின் ஒன்றியத்தின் இணைப்பாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அடங்கலாக பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சமுதாயத்தின் நிகழ்கால கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டு உள்ளிட்ட பல்கலையும் பொருளாதார வாழ்வியல் சார்ந்த ஆய்வுகள், தற்கால சமுதாயத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் இன்னல்கள் ஒன்றியத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. அமர்வின் பின்னர் ஊடக சந்திப்பொன்றையும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (2-312)




# வவுனிக்குளத்தின் பிரதான நீர்விநியோக, கழிவு வாய்க்கால்களை புனரமையுங்கள்

## விவசாயிகள் வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் நீர்ப்பாசன மற்றும் கழிவு வாய்க்கால்களை புனரமைக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற வவுனிக்குளத்தின் கீழ் ஆறாயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நெற்செய்கையில் வருடாந்தம் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருந்த குளத்தின் புனரமைப்புப்பணிகள் கடந்த மீள்குடியேற்றத்தின் பின்னர் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்கின்ற கருத்திட்டத்தின் கீழ் 600 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் புனரமைப்புப்பணிகளும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதான மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் புனரமைக்கப்பட்டன.

அத்துடன், செயலிழந்து காணப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களும் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டன.

இதன்மூலம் 6ஆயிரத்து 60 ஏக்கர் நெற்செய்கையும் ஆயிரத்து 325 மேட்டு நிலச் செய்கையும் மேற் கொள்ளக் கூடிய வகையில் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இக் குளத்தின் கீழான பிரதான நீர் விநியோக வாய்க்கால்களின் சில பகுதிகள், கிளை வாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் என்பன புனரமைக்கப்படாது இருக்கின்றன.

எனவே இவற்றைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள், விவசாய [illegible] கோரிக்கை விடுத்துள்ளனர். (2-312)

# நிதி மானியம் வழங்குவதற்கான பதிவுகள் செய்யும் திகதிகள்

## பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலைய அதிகார எல்லைக்கு உட்பட்ட கமக்கார அமைப்புக்களின் 2017/2018 கால போகப் பயிர்ச் செய்கை கூட்டத் தீர்மானங்களுக்கு இணங்க தற்போது பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 01.10.2017 முதல் 31.03.2018 வரை கால்நடை கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளமையால் கால்நடை வளர்ப்பாளர்கள் உரிய முறையில் கால்நடைகளைக் கட்டி பராமரித்து விவசாயிகளுடன் இணைந்து பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் பயிர்ச்செய்கை காணிகளுக்கு மிக அருகாமையிலும், வீதி ஓரங்களிலும் கால்நடைகளைக் கட்டுவதனையும் முற்றாகத் தவிர்க்குமாறும் பூநகரி கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தி யோகத்தர் மு.இரகுநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை மூலம் பயிர்க்காப்புறுதி செய்ய விரும்புவோர் தாம் விதைப்பு செய்யும் அன்றோ அல்லது அதற்கு ஒரு நாள் முன்னதாகவோ கமநல சேவை நிலையத்தில் காப்புறுதி செய்துகொள்ள முடியும். [illegible] இறுதி [illegible] திகதியான 31.10. 2017 இற்கு பின்னர் காப்புறுதிப் பதிவுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2017/2018 கால போகப் பயிர்ச் செய்கைக்குரிய உரங்களை கொள்வனவு செய்வதற்கான நிதி மானியம் வழங்குவதற்கான பதிவுகள் பின்வரும் கால அட்டவணைக்கு அமைவாக மேற் கொள்ளப்பட இருப்பதனால் ஏற்கனவே 2016/2017 காலபோகம் அல்லது 2017 சிறுபோகத்தில் நிதி மானியம் பெற்றவர்கள் தங்கள் தகவல்களை சரிபார்த்து கையொப்பமிடும் பொருட்டு தேசிய ஆள் அடையாள அட்டை, வங்கிக் கணக்கு புத்தகம், 2017 ஆம் ஆண்டிற்கான ஏக்கர்வரி மூலப் பிரதி என்பவற்றுடனும் இவ் வருடம் புதிதாக நிதி மானியம் பெற விண்ணப்பிப்போர் தே.அ.அட்டை, வங்கிப்புத்தகம், ஏக்கர்வரி என்பவற்றின் தெளிவான பிரதி, ஏக்கர் வரியின் மூலப்பிரதி மற்றும் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் என்பவற்றுடன் குறித்த தினங்களில் தங்கள் கமக்கார அமைப்பு பகுதிகளில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் இதுவரை 2017 ஆம் ஆண்டிற்கான ஏக்கர்வரி செலுத்தாதோர் குறித்த தினங்களில் அந்தந்த பகுதிகளில் செலுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதற்கமைய கொல்லகுறிச்சி, பரமன் கிராய் ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகள் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பொது மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

கொல்லகுறிச்சி, பரமன் கிராய் ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொது மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சாமிப்புலம், சின்னப் பல்லவராயன்கட்டு ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பொது மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

முக்கொம்பன் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9:30 மணிக்கு பொது மண்டபத்தில் பதிவுகளை செய்ய முடியும்.

சாமிப்புலம், . சின்னப் பல்லவராயன்கட்டு, முக்கொம்பன் ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பொது மண்டபத்தில் பதிவுகளை மேற் கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நாடுகளிடமும் ஐ.நா.சபையிடமும்

# நியாயம் கேட்பதற்கான வழியை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்

## செல்வம் எம்.பி.கேள்வி



(மன்னார்)

சர்வதேச நாடுகளிடம் நாங்கள் அரசியல் தீர்வு திட்டத்தில்ஏமாறுகின்ற போது, அல்லது ஏமாற்றம் அடைகின்ற போது சர்வதேச நாடுகளிடமும் ஐ.நா. சபையிடமும் நியாயம்கேட்பதற்கானவழியை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? என நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் சமகால அரசியல் கள நிலை தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எங்களிடம் பலம் இல்லை. சர்வதேசத்திடம் தான் நாங்கள் நியாயம் கேட்க வேண்டும். அப்படி என்றால் இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய இனப்பிரச்சினையை வெல்வதற்கு சில விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டும். அது சரணாகதி அரசியல் இல்லை என்பதனை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு நிறைய விட்டுக் கொடுப்புக்களை அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரித்ததன் காரணத்தினால்தான் இன்றைக்கு எங்களுடைய மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று விளக்கேற்றக்கூடிய வசதிகள் கிடைத்துள்ளது.

கடந்த அரசின் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் இன்றைக்கு பல மாதங்களாக தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதனை கேட்டு தொடர்ச்சியாக நியாயமான போராட்டங்களை மேற்கொள்கின்றார்கள்.

இன்றைக்கு எங்களுடைய மக்களின் காணிகள் பலவற்றை இராணுவம் சூறையாடியுள்ளது. அந்த நிலங்களை மீட்டுத் தர வேண்டும் என்பதற்காக மக்கள் இராணுவத்திற்கு எதிராக போராடுகின்றனர். எம் மக்களுக்கு அந்த துணிச்சல் வந்தது இன்றைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக தம் இனத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய பல விடயங்களைத் தாண்ட வேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து கொண்டு செய்கின்ற ஆதரவுகள் தான் இன்றைக்கு எங்களுடைய போராட்டங்களை மேலே கொண்டுவர வைத்துள்ளது என்பதனை யாரும் மறந்து விட முடியாது என அவர் தெரிவித்தார். (2-4)

# குடிநீருக்குத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு அம்பாள்புரம் பகுதியில் தற்போது நிலவுகின்ற வரட்சியினால் பாரிய குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. குடி நீரைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டதூரம் செல்ல வேண்டியிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வரட்சி காரணமாக குடிநீருக்கு பாரிய நெருக்கடி காணப்படுகின்றது. குறிப்பாக வீடு களில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுவது டன், இக் கிராமத்திலிருந்து மிக நீண்ட தூரத்திற்குச் சென்று குடிநீர் பெற வேண்டியுள்ளது.

மாந்தை கிழக்குப்பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடிநீர்த்தாங்கிக்கான கிணற்றிலும் நீரின்றிய நிலையில் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

தமக்கான குடிநீரை விநியோகிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும், 'இதுவரை குடிநீர் வழங்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-312)


# இளைஞன் படுகாயம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் பிக்கப்ரக வாகனமும் உந்துருளியும் மோதிக் கொண்டதில் முதலாம் வட்டாரம் கைவேலி புதுக்குடியிருப்பைச்சேர்ந்த தேவராசா நிசாந்தன்(வயது-25 என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். விபத்து சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-310-281)

# நான்கு சில்லு உழவு இயந்திரத்துடன் பொருத்தி சிறுதானியங்கள் விதையிடல்





மாகாண விவசாய திணைக்களமானது,மிக இலகுவான முறையில் நான்கு சில்லு உழவு இயந்திரத்துடன் பொருத்தி சிறுதானியங்கள் விதையிடல் மேற்கொள்ளக்கூடிய இயந்திரத்தை வவுனியா மாவட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது.

இந்த உபகரணம் மூலம் ஒரேநேரத்தில் விதைகளுடன் அடிக்கட்டு பசளை சேர்க்கப்பட்டு, ஒருநாளைக்கு 6 ஏக்கர் பரப்பளவில் வரிசைகளில் விதையிடல் மேற்கொள்ள முடியும்.

மேற்படி நடவடிக்கையானது ஓமந்தை, உலுக்குளம், பம்பைமடு ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளிற்குரிய பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும்வவுனியாஅரசவிதை உற்பத்திபண்ணையிலும் இச்சேவை இடம்பெற்று வருகின்றது.

ஒரு ஏக்கர் பரப்பளவில் விதையிடுவதற்கு கட்டணமாகஇரண்டாயிரம் ரூபா அறவிடப்படுகின்றது.

இந்த உபகரணத்தினை பயன்படுத்துவதால் விவசாயிகளிற்கு நன்மைகள் கிடைக்கின்றன. இதற்கமைய, கூலியாட் செலவு குறைவு, பயிரிடை வெளிசரியான முறையில் பேணப்படல், களைகட்டுப்படுத்தும் இயந்திரம் மூலமான களை கட்டுப்பாடு மேற்கொள்ளல் இலகு, ஒப்பீட்டளவில் குறித்த நிலப்பரப்பில் இருந்து கிடைக்கும் விளைச்சல் அதிகம். குறைந்தளவு விதை தேவை, நோய் பீடை களின் தாக்கம் குறைவாக் காணப்படும் போன்ற நன்மைகள் கிடைக்கும்.

மேலதிக விபரங்களை தங்களது பிரிவு விவசாய போதனாசிரியர் களிடம் பெற்றுக் கொள்ளமுடியும் என வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 2005ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக 30 துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 29 ஆம் திகதி வவு/நெடுங்கேணி மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. இதற்கமைய வவு/நெடுங்கேணி மகா வித்தியாலயம் - 12, வவு/மாறாயிலுப்பை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - 2, மு/ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - 10, வவு/பட்டிக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - 2, வவு/தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை -4 ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது.

# தேராவில் மக்களின் குறைகளை கேட்டறிந்தார் மாகாணசபை உறுப்பினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேராவில் பகுதி மக்களது அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் வடக்குமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தேராவில் பகுதியில் மக்கள் பல்வேறு பிரச்சினைகள் எதிர்கொண்டுவருவதாகவும் இதனை மாகாணசபை உறுப்பினருக்கு தெரியப்படுத்தும் விதமாக கிராம அபிவிருத்தி சங்கம் ஊடாக மக்கள் சந்திப்பு ஒன்றினை நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஏற்பாடு செய்திருந்தனர்.

தேராவில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தியாகு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் கலந்து கொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்துள்ளார்.

இதில் குறிப்பாக நுண்நிதி கடனால் நிறுவனம் சார்ந்தவர்களின் தொல்லைகளுக்கு கடனாளிகளாகுவதாக மக்களால் முறையிடப்பட்டதுடன் தேராவில் பகுதியில் குறித்த கடன்கொடுக்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரி மனு ஒன்று வடக்கு மாகாணசபை உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

போரில் அதிகளவு பாதிப்புகளை சந்தித்த மக்கள் வாழ்கின்ற இந்த கிராமத்தில் நாளாந்தம் வருமானத்திற்கு பல்வேறு கஷ்டங்களை எதிர் கொள்வதாகவும் குடிநீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்கள் வடக்கு மாகாணசபை உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த வடக்கு மாகாணசபை உறுப்பினர், உடனடியாக தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை உரியவர்களுடன் பேசி அவற்றை செய்து தருவேன். எமது மாவட்டத்தின் பல்வேறு குறைகளை நீக்க பிரதானமாக நிதி என்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது. உங்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் நிதிகளை பெறக்கூடிய வழிகளினூடாக அவற்றை நிறைவு செய்ய முயற்சி எடுப்பேன் என அவர் தெரிவித்தார். (2-281-315)





# பல்லவராயன் கட்டிலுள்ள தென்னங்காணியை விவசாய அமைச்சு பொறுப்பேற்க வேண்டும்

(பரந்தன்)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முக்கொம்பன் கிராம அலுவலகப் பிரிவிலுள்ள சின்னப் பல்வராயன் கட்டுக் கிராமத்தில் தென்னந்தோட்டக் காணியில் நூற்றுக்கணக்கான தென்னைகள் தீயில் கருகி வருவதால் வடக்கு மாகாண விவசாய அமைச்சு இதனைப் பொறுப்பேற்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலப் பகுதியில் தென்னந் தோட்டக்காணிகள் உருவாக்கப்பட்டு பாதுகாப்பான வேலிகள் போடப்பட்டு தென்னங்கன்றுகள் செழிப்பாக வளர்ந்து வந்தன.

நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தினால் 2009 ஆம் ஆண்டின் முன்னர் பராமரிப்பின்றி அடிக்கடி தீ முட்டப்படுவதன் காரணமாக தென்னை மரங்கள் தீயில் கருகும் நிலை காணப்பட்டது. வட மாகாண விவசாய தென்னைப் பயிர்ச்செய்கை சபை ஊடாக இத் தென்னம் தோட்டத்தை பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்டகாலமாக இப் பகுதி பொது அமைப் புகளினால் விடுக்கப்படுகின்ற போதிலும் இதுவரை தென்னங் காணி பொறுப்பேற்கப்படவில்லை. இக் காணியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணியாளர்களும் பணியில் ஈடுபடுகின்றனர். வடக்கு மாகாண விவசாய அமைச்சு குறித்த காணியைப் பொறுப்பேற்க வேண்டும்.

இல்லையேல் தென்னைகள் அழிவதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சும் பொறுப்பேற்க வேண்டும். சுமார் 150 ஏக்கர்களில் தென்னை மரங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தரும் இதயம் பற்றி

# இதய பூர்வமாக சிந்தியுங்கள்

சீராக இரத்தத்தை பிற உறுப்புகளுக்கு அனுப்பிக் கொண்டு மௌனமாக செயற்படும் இதயத்திற்கும், அதன் பராமரிப்பிற்கும் சரியான கவனமும், ஆய்வுகளும், சிறந்த முயற்சிகளும் மிக அவசியம்.

ஆரோக்கியத்திற்கு மையமாய், விளங்குவது இதயம் தான். எனவேதான் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பது விலை மதிப்பற்றது, மிக் மிக முக்கியமானது. நன்கு, தங்கு தடையின்றி இயங்கிக் கொண்டு, சீராக் இரத்தத்தை பிற உறுப்புகளுக்கு அனுப்பிக் கொண்டு மௌனமாக செயற்படும் இதயத்திற்கும், அதன் பராமரிப்பிற்கும் சரியான கவனமும், ஆய்வுகளும், சிறந்த முயற்சிகளும் மிக அவசியம்.

இதய ஆரோக்கியம் என்பதைப் பற்றி ஓரளவு ஆழமாகத் தெரிந்து கொண்டால் தான், இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் அவசியம் புரியும். அதற்கான முயற்சிகளையும் எடுக்க முடியும். வருமுன்னர் காப்பது என்பது மிக முக்கியம்' சொல்லப் போனால் வந்தபின் சிகிச்சை அளிப்பதை விட முக்கியமானது. நியாயமான, அறிவியல்பூர்வமாக சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும், "நமது இதயத்தை தூண்கள் போல் தாங்குபவை எவை? எதனால் இதயம் வலுவிழக்கிறது? இதயத்தின் எதிரிகளை எப்படி அறிவது? எப்படித் தடுப்பது? இவற்றையெல்லாம் சரியாக செய்தால் நமக்கு என்ன பலன் கிடைக்கும்?' என்பது போன்ற பல கேள்விகள் எழுவது நிச்சயம்.



ஆரோக்கியமான இதயத்தைத் தாங்கும் முதல் அடிப்படைத் தூண், சரியான ஆரோக்கியமான உணவு தான். இதய ஆரோக்கியத்திற்கான சரியான உணவினால்என்ன கிடைக்கும்? உணவு என்பது காலத்திற்கேற்ப மாறி வருகிறது. அதன் பல்வேறு முகங்களும் காலத்திற்கேற்ப தேவைகளுக்கேற்ப மாறி வருகின்றன. ஆயினும் எப்போதும் மாறாமல் இருப்பது ஒன்றுதான்.

. சரிவிகித உணவு என்பது எப்போதும் சிறந்தது. அங்கங்கே அருகில் கிடைக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு எவ்வித மான சத்தையும் ஒரேயடியாகக் குறைத்துவிடாமல் தயாரிக்கப்படும் உணவே என்றும் சிறந்தது. பாதுகாப்பானது. சத்துணவு ஆலோசகர்கள் இதற்கு உதவலாம்.

அடுத்த தூண் சரியான உடற்பயிற்சி. உடலுக்கும் உள்ளத்திற்கும் நாம் அளிக்கும் சரியான பயிற்சிகள் தான். உண்மையிலேயே நம்மை நீண்ட நாள் வாழ வைக்கின்றன. இது காலத்தை வென்ற ஓர் உண்மை. யாராலும் மறுக்க முடியாத உண்மை. ஆரோக்கியமான உடற்பயிற்சிகள், ஆரோக்கியமான உடலை உருவாக்கும். உங்கள் குழந்தைகளுடன் நீங்கள் மெதுவாக ஓடினால் (ஜாக்கிங்) உங்கள் பேரக் குழந்தைகளுடன் நடக்க முடியும்!

உங்கள் பேரக் குழந்தைகளுடன் நடந்தால், கொள்ளுப் பேரன்களுடன் விளையாடவும் முடியும். உங்கள் உடலை அன்புடனும், கனிவுடனும் பாதுகாக்கும் விதத்தில் உடற்பயிற்சி செய்யுங்கள். தேவைக்கு அதிகமாக உடற்பயிற்சி செய்து துன்பங்களை வரவழைத்துக் கொள்ளாதீர்கள். மூன்றாவது தூண், ஆபத்துக் காரணிகளைத் தடுக்கும் நடவடிக்கைகள். இது சற்று சிக்கல்கள் நிறைந்த தூண். இவற்றுக்கான எதிரிகளை நாம் முதலில் பட்டியலிட வேண்டும், பிறகு வெல்ல வேண்டும்.

உயர் இரத்த அழுத்தம், இரத்தத்தில் அதிக சர்க்கரை, உயர்ந்த அளவு இரத்தத்தில் கொலஸ்ட்ரோல், புகை பிடித்தல், அதிக உடல் பருமன், மிகவும் சுறுசுறுப்பற்ற வாழ்க்கை முறை, மன இறுக்கம் போன்ற எல்லாமே இதற்கு எதிரிகள் தான்.

இவற்றை எதிர்த்து நமது இதயத்தைக் காக்கும் போரில், உணவும் உடற்பயிற்சியும் நமக்குத் உறுதுணையாக நிற்கும். உங்கள் குடும்ப மருத்துவரின் ஆலோசனை கேட்டு அதன் படி நடந்தால் வெற்றி உறுதி. சரியான இடைவெளிகளில் பரிசோதனைகளையும் (மெடிக்கல் செக்கப்களும்) செய்து கொள்வது அவசியம்.

புகைபிடித்தலை தவிர்ப்பது அவசியம். அதே போல் புகை பிடிப்பவர்களை, புகை பிடிக்கும்போது தவிர்ப்பதும் அவசியம். சமூகப் பொறுப்புணர்வோடு அனைவருமே புகைபிடித்தலைத் தவிர்த்தால், சமூகமே ஆரோக்கியமாக மாறும். சுறுசுறுப்பில்லாத, மந்தமான வாழ்க்கையும், அதிக மன அழுத்தமும் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவை. எல்லாத் துறைகளையும் போல், இதிலும் சரியாக, சமச்சீராக அனைத்திலும் கவனம் செலுத்துதல் அவசியம். வேலையோ, அதிக வேலையோ என்றுமே ஒருவரையும் கொன்று விடாது.

ஆனால் விருப்பமின்றி , உற்சாகமின்றி செய்யும் வேலையினால் ஆபத்தே அதிகம். தான் செய்யும் வேலையை விரும்பி சந்தோசமாக செய்வதை ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இத்தனை முயற்சிகளுடன் நம் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருந்தால், என்ன பலன் கிடைக்கும் என்ற கேள்வி எழலாம்! கட்டாயமாக நீண்ட ஆயுள் கிடைக்கும்! நல்ல துடிப்பான நன்கு செயற்படக் கூடிய, சவால்களை எளிதில் சந்திக்கக் கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை கிடைக்கும்! அது மட்டுமன்றி, இவ்வாறு உள்ள ஒருவரைப் பார்த்து பலர் உற்சாகமாகப் பின்பற்றுவதால், சமுதாயமே ஆரோக்கியமான, துடிப்புள்ள சமுதாயமாக மாறுவது உறுதி.


Health Care **மருத்துவ உலகம்**

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# மூளையின் ஞாபகசக்தியினை கூட்டுவதற்கு பயிற்சி அவசியம்

உடலுக்கு பயிற்சி போல் மூளைக்கும் விடாது பயிற்சி கொடுத்துக் கொண்டே இருந்தால்தான் மூளையும் சுறுசுறுப்பாய் இருக்கும்.

அடிக்கடி நாம் சொல்லும் சில வார்த்தைகளில் ஒன்று 'மறந்து போச்சு' என்பதுதான். உடலுக்கு பயிற்சி போல் மூளைக்கும் விடாது பயிற்சி கொடுத்துக் கொண்டே இருந்தால்தான் மூளையும் சுறுசுறுப்பாய் இருக்கும். பொதுவில் வயது கூடும் பொழுது மறதி ஏற்படும்.



பல வருடங்களுக்கு முன்னால் நடந்தது. நன்கு ஞாபகத்தில் இருக்கும். சில மாதங்களுக்கு முன்னால் நடந்தது ஞாபகத்தில் இருக்காது. ஞாபக சக்தியினை கூட்டுவதற்கு பயிற்சியும் மிகமிக அவசியம். அன்றாட வேலைகள் ஞாபகம் இருப்பதற்கு காரணம் பல வருடங்களாக அதனை தொடர்ந்து செய்வதே. மூளை மிகவும் சக்தி வாய்ந்தது. எந்த வயதிலும் நீங்கள் ஞாபகசக்தியினை கூட்ட புதிய முயற்சிகள் செய்யலாம்.

முறையான 8 செக்கன் கவனம் ஒரு செய்தியினை நன்கு ஞாபகத்தில் வைக்கும். ஆனால் இன்று நாம் காண்பதோ பரபரப்பான உலகம். ஒரு கையில் போன் (இல்லை கழுத்தில் போன்) ஒருகையில்ஏதோ ஒரு வேலை, கண் மற்றொன்றினை கவனிக்கும், கால் ஒரு இடம் நோக்கி நடக்கும். இப்படி செய்வதும் இளமையில் மூளையால் ஈடு கொடுக்க முடியும்.

அதிக வேலைச் சுமை கூடும் பொழுது செய்திகள் பதிவது பாதிக்கப்படும். அடிக்கடி செல்போனை எங்கு வைத்தேன், சாவியினை எங்கு வைத்தேன் என்று தேடுவது இக்காரணத்தினால் தான்.

மூளைக்கு சவால் விடும் விளையாட்டுகளை தினமும் சிறிது நேரம் பயிற்சி செய்யுங்கள். ஒரு போன் நம்பரை நினைவு வைக்க (உ.ம்) 55 55 55 2793 எனின் அதனை 555 555 2793 என்ற முறையில் நினைவில் வையுங்கள்.

* எந்த ஒரு நிகழ்வையும் அப்படியே படமாக மனதில் பதிய வையுங்கள்.

* அன்றாட வேலைகள் முறையாய் நேரப்படி செய்யுங்கள்.

* முக்கியமானவைகளை முதலில் செய்யுங்கள்.

* உங்கள் ஐம்புலன்களும் முறையாய் செயற்படுவது உங்கள் ஞாபகத்திறனைக் கூட்டும்.

* கண்டிப்பாய் 20 நிமிடங்கள் தியானம் பழகுங்கள். உங்கள் மன உளைச்சல் காணாமல் போய் விடும்.

* அன்றாட வேலைகளை காலையில் எழுதுங்கள். முடிந்த செயல்களை 'டிக்' செய்யுங்கள்.

* நீங்களே சில நிமிடங்கள் உங்களுடன் பேசிக் கொள்ளுங்கள். இதனைத் தனிமையில் செய்யுங்கள். இல்லையென்றால் உ[illegible]களை மற்றவர்கள் தப்பாக நினைத்து விடுவார்கள்.

* மதுவானது மூளை, உடல் நலம் இரண்டினையும் கெடுக்கும். எனவே மது கூடவே கூடாது.

* 7-9 மணி நேரம் தூங்குங்கள்.

* உடற்பயிற்சி செய்யுங்கள்.

கல்சியம், விற்றமின் சி, புரதம் இவற்றின் அவசியத்தினை அநேகரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றோம். ஆனால் சில அவசிய விற்றமின்கள், தாது உப்புகளின் முக்கியத்துவம் பற்றி நாம் இன்னமும் சரியாக அறியாமலேயே இருக்கின்றோம்.



மக்கள் வங்கியின் புலோலி சேவை நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுக் காலை பிரதான வீதி மந்திகையில் இடம்பெற்றது. இதில் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறியும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்திக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் 148 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பருத்தித்துறையில் உள்ள அவரின் சிலைக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பருத்தித்துறை முன்னாள் நகர சபைத் தலைவர் சபா. இரவீந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (இ-60)

# சதுர்த்தி அபிஷேகம் நாளை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்கு புரட்டாதி மாத சதுர்த்தி அபிஷேகம் நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெறும். (இ-7)

# நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்ரமணியர் கலா மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, கௌரவ விருந்தினராக கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்ரமணியர் கலா மண்டபத் தலைவர் நடராசா யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-102)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி வல்லை வளைவால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மதிலுடன் மோதியதில் அச்சுவேலி அந்தோனியார் கோவிலடியைச் சேர்ந்த த.சாளின்விராஜ் (வயது -23) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். (இ-10-30)

# நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டும் க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை இம்மாதம் 14 ஆம்,15 ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத் தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.இப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இம் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## விற்பனைக்கு

சாவகச்சேரி தணங்கிளப்பு ரோட், மாக்கட் பக்கம் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு (கிணறுடன்) வீடு கட்டும் வசதி தனிப்பாதை வசதி உண்டு.

தொடர்பு கொள்ளவும்
(867) 077 765 6918

## மலிவு விற்பனை

லைடன் புடைவை நிலையத்தில் தீபாவளியை முன்னிட்டு 01.10.2017 - 18.10.2017 வரை சகல பொருட்களும் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.
பாடசாலைச் சீருடைத் துணிகளுக்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
✦ வேலையாட்கள் தேவை (பெண்கள்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2381
(இ-9824)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்

புதிய அனுமதி

பண்பாட்டியலில் முதுகலைமாணி 2017/18 (அணிIII)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அனுமதிகுரிய தகைமைகள்

➢ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கை நெறியில் பட்டம். (தமிழ்,சமஸ்கிருதம், இந்துநாகரிகம், இந்துமெய்யியல்,வரலாறு,சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

அல்லது

➢ பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக்கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கற்கைநெறிக் காலம்: ஒருவருடம்
மொழி மூலம் :தமிழ்
தெரிவுமுறைமை: நேர்முகத்தேர்வு
கற்கைநெறிக்கட்டணம் : 100,000/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள்பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு 1000/= கட்டணத்தை செலுத்தி உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23X10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர்,உயர்பட்டப்படிப்புகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் *(website)* பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 30.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரியவிண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு :-ஏற்கனவே இக்கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

பதிவாளர் (சி-9839)


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 RC
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: B/7802

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 8
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:MSc/ பொறியியலாளர் லண்டன்
தொ.இ: B/7803

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 43 சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7804

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/7808

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/கணக்காளர்
தொ.இ: G/7801

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 8
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7806

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19 செவ் 12 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:BA/அரச தொழில்
தொ.இ: G/7807

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:10
உயரம்: 158cm
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/7809

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நடராஜன் உடல்நிலை கவலைக்கிடம்
## சசிகலா பரோலில் வர முடிவு



(பெங்களூர்)
நடராஜன் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதால் சிறையில் உள்ள சசிகலா பரோலில் வர முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

சொத்துக்குவிப்பு வழக்கில் கைதாகி தண்டனை பெற்ற சசிகலா பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரது கணவர் நடராஜன் உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது சிறுநீரகம் உட்பட பல உறுப்புகள் செயல் இழந்துள்ளதால் அவரது உடல்நிலை கவலைக் கிடமாக உள்ளது.

இந்த தகவல் சிறையில் உள்ள சசிகலாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கணவரை சந்திக்க சசிகலா முடிவு செய்துள்ளார். இதுதொடர்பாக பரோல் கேட்டு சிறைத்துறை அதிகாரிகளிடம் விண்ணப்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பரோல் பெற என்னென்ன ஆவணங்கள் தேவை? பரோல் பெற தகுதி உள்ளதா? என்று சிறைக் கண்காணிப்பாளரிடம் சசிகலா கேட்டு தெரிந்து கொண்டதாக தெரிகிறது.

மேலும் பரோல் பெறுவதற்கான முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

இதுதொடர்பாக கர்நாடக மாநில அ.தி.மு.க. (அம்மா) அணிச் செயலாளர் புகழேந்தி கூறியதாவது.

சசிகலாவை பரோலில் எடுப்பதற்காக நியாயமான காரணங்களை எடுத்துக் கூறி விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளதா? என்று கேட்டோம்.

நாங்கள் கொடுத்த ஆவணங்களை பார்த்த சிறை அதிகாரி போதுமான ஆவணங்கள் உள்ளதால் பரோல் கேட்டு விண்ணப்பிக்கலாம் என்று கூறி உள்ளார். இதையடுத்து இது தொடர்பாக சசிகலாவின் அனுமதியுடன் பரோல் கேட்டு விண்ணப்பிக்க முடிவு செய்துள்ளோம் என்று தெரிவித்தார். (8)

# 174 நாட்கள் தொடர்ந்து நடந்த நெடுவாசல் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது

(புதுக்கோட்டை)
ஐதரோகார்பன் திட்டத்திற்கு எதிராக நெடுவாசல் கிராமத்தில் நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த போராட்டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் டெல்டா பகுதியில் எரிவாயு எடுக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இதற்கு அந்தந்தப் பகுதி பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அவ்வகையில் நெடுவாசலில் ஐதரோகார்பன் திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி போராட்டத்தைத் தொடங்கினர்.

அரசின் கவனத்...
கும் வகையில் ஒ...
நாளும் ஒவ்வொ...
யான போராட்டத்தி...
பொதுமக்கள். இது...
மன்றத்தில் தீர்மான...
வேற்றவும் வலியு...
சட்டமன்றத்தில் தீ...
நிறைவேற்றப்படா...
யில் மக்கள் போராட்...
ர்ந்து நடைபெற்று ...
இந்நிலையில், ...
ளாக நடந்த போராட்டம் நேற்று தற்...
விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இத்...
போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர்...
தெரிவித்தார். ஐதரோகார்பன் திட்டப் ...
ஓ.என்.ஜி.சி.மீண்டும் தொடர்ந்தால்...
டம் தொடரும் என்றும் அவர் கூறி...

# பழனிச்சாமி அரசுக்கெதிராக துண்டுப் பிரசு... தினகரன், புகழேந்தி, வெற்றிவேல் மீது வழக்...

(சேலம்)
மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக சேலத்தில் துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்ததில் தினகரன், புகழேந்தி, வெற்றிவேல் படங்கள் இருந்ததால் அவர்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

நீட் தேர்வால் மாணவ-மாணவிகள் பாதிப்படைந்துள்ளனர். இதை விலக்குவதற்கு பழனிச்சாமி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை உட்பட பல வாசகங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் அண்மையில் விநியோகிக்கப்பட்டிருந்தன. இதுபற்றி அஸ்தம்பட்டி பகுதி அ.தி.மு.க. செயலாளர் சரவணன் அன்னதானபட்டி பொலிஸில் புகார் செய்தார்.



இதன் பேரில் தினகரன். புகழேந்தி. வெற்றிவேல் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.கே.செல்வம், வெங்கடாசலம் உட்பட 17 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதையடுத்து பொலிஸார் தினகரன் ஆதரவாளர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை வெங்கடாசலம் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். மற்றவர்களை கைது செய்ய முடிவு செய்துள்ளனர்.

கைதான வெங்கடாசலம் நிருபர்களிடம் கூறியதாவது,

நீட் தேர்வை இரத்து செய்யக்கோரி சேலத்தில் தினகரன் அணியை சேர்ந்த நாங்கள் கடந்த 29 ஆம் திகதி துண்டுப்பிரசுரம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டோம். இச்செயலை அரசுக்கு எதிராக அவதூறு பரப்பியதாக கூறி பொலிஸார் எங்களை கைது செய்து இருக்கிறார்கள். இது அரசியலில் பழி வாங்கும் நடவடிக்...

தினகரன் அணியை சேர்ந்த எ... வேண்டும் என்றே அரசு எங்கள... பாட்டை முடக்கும் வகையில் கைது... கையில் ஈடுபட்டுள்ளது. இதுபோ... வடிக்கைகளை கண்டு நாங்கள் அ... டோம்.

தமிழகத்தில் நீட் தேர்வை இரத்து... வரை எங்களது போராட்டம் ஓய... போன்று எத்தனை வழக்குகள் வ... நாங்கள் சந்திக்க தயாராகவே உள்ளோ...

தமிழ்நாட்டில் பேச்சு சுதந்... பொய் வழக்கு பதிவு செய்யப்படு...

என் மீதும் மற்றவர்கள் மீதும்... பட்டுள்ள வழக்கை சட்டப்படி ச... என்றார்.

# அசாமில் மீண்டும் கனமழை
## 5 மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன



(கவுகாத்தி)
அசாமில் பெய்து வரும் கனமழையால் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஐந்து மாவட்டங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாசலப் பிரதேசம் மற்றும் மேகாலயாவில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. பெரும்பாலான இடங்களை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடும்மழையால் அசாம் மாநிலத்தில் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. அம்மாநிலத்தின் வெள்ளநீர் சூழ்ந்தது. ஐந்து மாவட்டங்களை சேர்ந்த 78 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மாநில பேரிடர் மேலாண்மை குழு அதிகாரிகள் கூறுகையில்,

'வெள்ளத்தில் சிக்கிய 78 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

18 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு தங்க வைக்கப்பட்டு உள்ளனர். அம்மாநிலத்தில் ஓடும் தன்சிரி ஆற்றில் அளவுக்கு மீறி வெள்ளம் பாய்ந்தோடுகிறது. வெள்ளத்தில் 86 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இந்த வெள்ளத்தில் 306 ஹெக்டேயர் பரப்பிலான விளைநிலங்கள் பாதிப்பு அடைந்துள்ளன" என தெரிவித்தனர்.

வெள்ள நிவாரண பணிகளை விரைந்து செய்யுமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு அம்மாநில முதல்வர் சர்மானந்தா சோனோவால் உத்தரவிட்டுள்ளார். கடந்த மாதம் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 78 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# பெரும்பான்மையை நிரூபிக்க...
## மு.க.ஸ்டாலின் கேள்வி

(ஊட்டி)
18 எம்.எல்.ஏக்களை நீக்கியதை இரத்து செய்துவிட்டு சட்டமன்றத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க தயாரா? என்று முதலமைச்சர் பழனிச்சாமிக்கு, தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.



நீலகிரி மாவட்டம் ஊட்டி கேசினோ சந்திப்பில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அறிஞர் அண்ணாவின் வெண்கல சிலையின் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் அண்ணா சிலையை திறந்து வைத்தார். மேலும் அங்கு நூலகத்தையும் அவர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதன்பின்னர் ஊட்டி ஏ.டி.சி. திடலில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் கூறியதாவது.

தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடந்து கொண்டிருக்கும் ஆட்சி மீது மக்கள் அளவு கடந்த கோபத்தில் இருக்கிறார்கள்.

ஆட்சியில் இருக்கிற கோபத்தை விட எங்கள் மீது தான் கோபத்தில் உள்ளனர். இன்னும் இந்த ஆட்சியை கலைக்காமல், கவிழ்க்காமல் உள்ளார்களே என்பது தான் அந்த கோபம். தமிழக மக்கள் ...
உள்...
18...
சென்...
என்...
களு...
பெரு...
சொல்...
என்...
உத்...
மன்...
யுங்க...
முடிய...
ஆக...
ச...
த்தின்...
இருக்...
இந்த...
4 ஆ...
காத்...
ங்கள்...
கூடிய...
தீர்ப்...
அதற்...
என்று...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



...தை ஈர்க் ...வ்வொரு ...ரு வகை ...ல் ஈடுபட்ட ...பற்றி சட்ட ...ம் நிறை ...த்தினர். ...ர்மானம் ...த நிலை ...டம் தொட ...வந்தது. ...74 நாட்க ...காலிகமாக ...தகவலை ...புஷ்பராஜ் ...ணிகளை ...போராட் ...ளர். (8)

...ரம்; ...க்கு



...கையாகும். ...ங்கள் மீது ...து செயற் ...நடவடிக் ...ன்ற நட ...அஞ்சமாட் ...செய்யும் ...ாது. இது ...வந்தாலும் ...ளோம். ...து. ...ம் போடப் ...திப்போம் (8)

## தனிநாட்டுக் கோரிக்கைக்கான பொதுவாக்கெடுப்பு;

# ஸ்பெயினிலிருந்து பிரிந்து செல்ல 90 சதவீத மக்கள் ஆதரவு

(பார்சிலோனா)

ஸ்பெயினில் இருந்து காட்டலோனியா மாகாணத்தை பிரித்து தனி நாடாக அங்கீகரிக்க வலியுறுத்தி நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பில் தனி நாடு கோரிக்கைக்கு ஆதரவாக 90 சதவீத மக்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக காட்டலோனியா திகழ்கிறது. வடகிழக்கு ஸ்பெயினில் செழிப்பான இந்த மாகாணத்திற்கு கூடுதல் சுயாட்சி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், ஸ்பெயின் அரசியல் சட்டம் அதை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை.

அங்கு கடந்த 5 ஆண்டுகளாக தனி நாட்டு கோரிக்கைகள் வலுத்துள்ள நிலையில், இதுதொடர்பாக நேற்று முன்தினம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்பெயினில் இருந்து பிரிந்து தனி நாடாக வேண்டுமா அல்லது ஸ்பெயினுடன் இணைந்தே இருக்கலாமா என்பது பற்றி பொதுமக்களின் கருத்தறியும் வகையில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஸ்பெயின் அரசும், அரசியலமைப்பு நீதிமன்றமும் இதற்கு அனுமதிக்காததால், வாக்கெடுப்பை முறியடிக்க பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தனர். சில இடங்களில் வாக்குப்பெட்டிகளையும், வாக்குச் சீட்டுகளையும் கைப்பற்றினர். சில இடங்களில் வாக்களிக்க வந்தவர்களிடம் அத்துமீறி நடந்தனர். எனவே, வாக்காளர்கள் எந்த வாக்குச்சாவடிக்கு வேண்டுமானாலும் சென்று வாக்கு அளிக்கலாம் என காட்டலோனியா மாகாண அரசு கூறியது. இதனால் வாய்ப்பு கிடைத்த இடத்தில் மக்கள் வாக்களித்தனர்.

அரசின் கடும் எதிர்ப்பு வன்முறைகளுக்கு மத்தியில் வாக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டது. மொத்தம் 42.3 சதவீத வாக்குகள் பதிவாகின. அதில், 90 சதவீதம் மக்கள் சுதந்திர நாடு வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்து வாக்களித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தனி நாடு கேட்கும் உரிமையை காட்டலோனியா வென்றெடுத்திருப்பதாகவும், சுதந்திர பிரகடனத்துக்கான கதவு திறக்கப்பட்டிருப்பதாகவும் கேட்டலன் தலைவர் கார்லஸ் பூகிடமான்ட் தெரிவித்தார். (8)

# ஹவுத்தி போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது அமெ. உளவு விமானம்

(சனா)

ஏமன் நாட்டை உளவு பார்ப்பதற்காக அமெரிக்கா அனுப்பி இருந்த ஆளில்லா விமானத்தை சனா நகரில் ஹவுத்தி போராளிகள் சுட்டு வீழ்த்தினர்.



ஏமன்நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த மூன்றா ண்டுகளாக ஆயுதப் போரா ட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற னர். அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்தி வரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த ஆதரவுடன் நாட்டின் தலைநகரான சனா பகுதியை கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர் அந் நகரை தங்களது ஆளுமைக்கு உட்படுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில் தங்க ளது கட்டுப்பாட்டில் இருக்கும் சனா நகரின் மீது நேற்று பறந்த அமெரிக்க உளவு விமானத்தை ஹவுத்தி போராளிகள் சுட்டு வீழ்த்தினர். US MQ-9 ரகத்தை சேர்ந்த இந்த ஆளில்லா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட காட்சிகள் வெளி நாட்டு ஊடகங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. (8)

# ஐ.எஸ்ஸின் பிடிக்குள் வீழ்ந்தன சிரியாவின் முக்கிய நகரங்கள்

சிரியாவில் நடந்து வருகிற உள்நாட்டுப் போரை பயன்படுத்தி அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். முக்கிய நகரங்களையும் பிடித்தனர்.

அவர்களுக்கு எதிராக ஒரே நேரத்தில் சிரியா ஜனாதிபதி படைகளும், ஜனாதிபதி ஆதரவு ரஷ்யா படைகளும், அமெரிக்க கூட்டுப் படைகளும் மும்முனை தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இருப்பினும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதிக்கத்தை ஒடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.




இந் நிலையில், அங்கு ஹோம்ஸ் மாகாணத்திலுள்ள கிரயதாயின் நகரத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் தங்கள் பிடியின் கீழ் கொண்டு வந்துள்ளனர். இந்த நகரம், சிரியாவின் தலைநகரமான டமாஸ்கஸ் நகரத்தில் இருந்து 120 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள முக்கிய நகரம் ஆகும்.

இந்த நகரம், ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் வந்துவிட்டதை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் உறுதி செய்தது.

இதுபற்றி அந்த அமைப்பு கூறும்போது, "திடீரென அதிரடி தாக்குதல் நடத்தி இந்த நகரத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைப்பற்றி விட்டனர்" என்று தெரிவித்தது.

இந்த நகரம் வீழ்ந்து விட்டது பற்றி சிரியா ஜனாதிபதி ஆதரவு படைகள் தரப்பில் இருந்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (8)

# சவுதி பல்கலையில் பெண்களுக்கான சாரதிப் பயிற்சி



(றியாத்)

இஸ்லாமிய நாடான சவுதி அரேபியாவில் பெண்களுக்கு சாரதிப் பயிற்சி பாடசாலையைத் திறக்க சவுதி பல்கலைக்கழகம் முடிபு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்லாமிய நாடான சவுதி அரேபியாவில் 'ஷரியத்' சட்டம் கடைப்பிடிக்கப்படுகிறது. எனவே அங்கு பெண்களுக்கு கார் ஓட்ட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அங்கு பெண்கள் கார் ஓட்ட தடை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் இருந்தே பெண்கள் உரிமை சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன. மீறி கார் ஓட்டிய பெண்கள் கைது செய்யப்பட்டனர். அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்நிலையில் நீண்ட கால கோரிக்கையை ஏற்று பெண்கள் கார் ஓட்ட விதித்திருந்த தடையை சவுதி அரேபிய அரசு நீக்கியுள்ளது. அதை தொடர்ந்து வருகிற 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பெண்கள் கார் ஓட்ட அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில் சவுதி அரேபிய அரசு, பெண்கள் கார் ஓட்ட விதித்திருந்த தடையை நீக்கியதை தொடர்ந்து சவுதி பல்கலைக்கழகம் பெண்களுக்கு ஓட்டுநர் பயிற்சி பாடசாலை திறக்கப்படும் என அறிவித்துள்ளது. இளவரசி நொரா பல்கலைக்கழகம் பெண்களுக்காக ஓட்டுநர் பயிற்சி பாடசாலையை திறக்க திட்டமிட்டுள்ளது. (8)

...கத் தயாரா?

...கொதிப்பாகவும், கொந்தளிப்பாகவும் ...ள்ளனர்.

...18 எம்.எல்.ஏக்கள் உங்களிடம் இருந்து ...ன்று விட்டனர். உங்களை மாற்ற வேண்டும் ...று போர்க்கொடி தூக்கியுள்ளனர். உங் ...க்கு தைரியம் இருந்தால், இந்த ஆட்சி ...ரும்பான்மையை ஆட்சி என்று நீங்கள் ...ல்வதை நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் ...று சொன்னால் 18 எம்.எல். ஏக்களை நீக்கிய ...த்தரவை இரத்து செய்து விட்டு, சட்ட ...றத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபி ...கள். இது முதலமைச்சர் பழனிச்சாமியால் ...யுமா?. இதற்கு நீங்கள் பதில் சொல்லியே ...வேண்டும்.

...சட்டமன்றத்தை ஆளுநர் கூட்டாத காரண ...னால், உயர்நீதிமன்றத்தை நாம் அணுகி ...க்கிறோம். நாளை 4 ஆம் திகதி மீண்டும் ...த வழக்கு விசாரணை க்கு வர இருக்கிறது. ...ஆம் திகதியை எல்லோரும் எதிர்பார்த்து ...த்திருக்கிறார்கள். இன்னும் சற்றுப் பொறு ...ள். தமிழ்நாட்டு மக்களே மகிழ்ச்சி அடையக் ...ய நல்ல தீர்ப்பு வர காத்திருக்கிறது. அந்த ...பின் மூலமாக தமிழகம் மகிழ்ச்சி அடையும். ...ற்கு காத்திருங்கள். தயாராக இருங்கள் ...று அவர் தெரிவித்தார். (8)

# வடகொரியாவுடன் பேசுவது நேரத்தை வீணடிக்கும் செயல்

## டில்லர்சனுக்கு ட்ரம்ப் அறிவுரை

வடகொரியாவுடன் அந் நாட்டின் அணு ஆயுத திட்டம் குறித்து பேச்சு நடத்துவதன் மூலம் தனது நேரத்தை வீண் செய்வதாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் ரெக்ஸ் டில்லர்சனிடம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுடன் அமெரிக்கா தொடர்பில் உள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், "உங்களின் சக்தியை சேமித்து வையுங்கள், ரெக்ஸ். என்ன செய்ய வேண்டுமோ, அதை நாம் செய்வோம்" என்று ட்ரம்ப் கூறியுள்ளார். அண்மைய மாதங்களில், வடகொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருகின்றன.

முன்னதாக, அமெரிக்





காவை அச்சுறுத்துவதன் மூலம் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஒரு "தற்கொலை முயற்சி யில்" ஈடுபட்டுள்ளார் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியிருந்ததற்கு: "வயது மூப்பால் மனத் தளர்ச்சியுற் றுள்ள ட்ரம்ப் ஆயுதங்க ளின் மூலமாக வழிக்குக் கொண்டுவரப்படுவார்," என்று கிம் ஜாங் கூறியிருந்தார்.

சமீப மாதங்களில், வடகொரியா தொடர்ந்து ஆயுத சோதனைகளில் ஈடுபட்டதால் இந்த இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது.

நீண்ட தூரம் செல்லக் கூடிய ஏவுகணையில் பொருத்தும் அளவில் உள்ள, சிறிய ரக ஐதரசன் குண்டு ஒன்றை தாங்கள் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளதாக கடந்த செப்டெம்பர் 3ஆம் திகதி வடகொரியா கூறியிருந்தது.

சர்வேதச அளவில் அந்த ஆயுத சோதனைகள் கண்டிக்கப்பட்டதுடன், அவற்றை நிறுத்தக்கோரி வடகொரியா மீது ஐ.நா. அவையால் பல தடைகளும் விதிக்கப்பட்டன.

வடகொரியாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் அக்கறை காட்டிவரும் அதன் நெருங்கிய கூட்டாளியான சீனா, இந்த வாரம் தங்கள் நாட்டில் உள்ள வடகொரிய தொழில் நிறுவனங்கள் அனைத்துக்கும் தடை விதித்தது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க-இலங்கை கடற்படைகளின் போர்ப்பயிற்சி திருமலையில் ஆரம்பம்



அமெரிக்க- இலங்கை கடற்படைகளுக்கு இடையிலான ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி நேற்று திருகோணமலைத் துறைமுகத்தில் ஆரம்பமானது.

கரட்-2017 எனப்படும் 'கப்பல் தயார் நிலை மற்றும் பயிற்சி ஒத்துழைப்பு-2017' ('Cooperation Afloat Readiness and Training' aka 'CARAT 2017') என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியை இலங்கை கடற்படையும், அமெரிக்காவின் பசுபிக் கப்பற்படையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

அமெரிக்க- இலங்கை கடற்படைகள் ஆண்டு தோறும் கூட்டுப் பயிற்சிகளை நடத்தவுள்ளன. அதன் முதற்கட்டமாகவே இந்தப் பயிற்சி நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 6ஆம் திகதி வரை இந்தக் கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறும்.

கடல்சார் பாதுகாப்பு முன்னுரிமைகள், படைகளுக்கிடையிலான இயங்கு தன்மையை வலுப்படுத்தல், தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் படைகளுக்கிடையில் நிலையான கடற்படை ஒத்துழைப்பை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இந்தப் பயிற்சிகள் இடம் பெறவுள்ளன்.

இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்க அமெரிக்க கடற்படையின் யு.எஸ்.எஸ். கொரனாடோ என்ற போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# தேர்தலில் வெற்றி பெற பிரபல்யம் மட்டும் போதும்

## பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

தற்காலத்தில் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தால் மட்டும் போதுமானது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங்கொட பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டின் வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்தியை நோக்கி முன்னெடுத்துச் செல்கின்றது. பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குத் தேவையான



சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

பாணந்துறை மொரடுமுல்ல, சுதர்மாராம வீதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், 28 வயது இளைஞன் பலியானார். துப்பாக்கிச் சூட்டில் கடும் காயமடைந்து, அவருடைய வீட்டின் முன்பாக விழுந்து கிடந்த, இளைஞன் பாணந் துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்து விட்டார் என்று பொலிஸார் தெரி வித்தனர். இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில், கல்கடஸ் வகை துப்பாக்கியுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மனுஸ்தீவு தடுப்பு முகாமில் இலங்கைத் தமிழர் மரணம்

(கொழும்பு)

மனுஸ்தீவில் உள்ள அவுஸ்திரேலிய குடிவரவுத் தடுப்பு முகாமில், இலங்கைத் தமிழர் (புகலிடக் கோரிக்கையாளர்) ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பப்புவா நியூகினியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை குறித்த இலங்கைத் தமிழர் வைத்தியசாலையில் மரணமானார் என்று பப்புவா நியூகினியா பொலிஸ் தலைவர் டொமினிக் ககாஸ், உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர் லொரென்கு வைத்தியசாலையில் தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று அகதிகள் நடவடிக்கை கூட்டணியைச் சேர்ந்த இயன் ரின்ரோல் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் சமையல் கூடம் அருகே இவரது, உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனுஸ்தீவு முகாமில், இரண்டு மாதங்களில் இடம் பெற்றுள்ள இரண்டாவது உயிர் மாய்ப்பு மரணம் இது என்றும் அவர் கூறினார்.

கிழக்கு லோரென்கு இடைத்தங்கல் நிலையத்தில் குறித்த நபர் தனக்குத் தானே பாதிப்பை ஏற்படுத்திக் கொண்ட சம்பவத்தை அடுத்து, மூன்று நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

மனுஸ்தீவு முகாமில், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 700 ஆண் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முகாம் திறக்கப்பட்ட பின்னர், இடம் பெற்றுள்ள ஆறாவது மரணம் இதுவாகும். (இ-7)

# இருதய மாற்று சிகிச்சை பெற்ற யுவதி மரணம்

(கொழும்பு)

கண்டி அரச வைத்தியசாலையில் இருதய மாற்று சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 19 வயது யுவதி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

கண்டி அரச வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையாக இது கருதப்படுகின்றது. அளு [illegible] இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த இருதய மாற்று சிகிச்சை கடந்த 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒரு வரி விமர்சனம்!

"அந்த அம்மா ரொம்பத் தங்கமானவங்க"

"அந்தப் பொண்ணு மகாத் திமிரு புடிச்சதுங்க"

"ரொம்ப கெட்டிக்காரப் பொம்பளைங்க அது"

"ரொம்ப உயர்ந்த மனுஷருங்க அவரு?"

"மனுஷனாய்யா அவன்?"

"அந்த ஆளு ஒரு மாதிரியானவருங்க"

"ஒருத்தருக்கும் இந்த ஆளு பிரயோசனம் இல்லாதவரு"

ஒரு மனிதனின் மிக நீண்ட வாழ்க்கையை இப்படி ஒரே வரியில் விமர்சித்து விடுகிறது இந்த உலகம்.

யாராக இருந்தாலும் சரி, இந்த ஒரு விமர்சனம் தான்.

ஒருவருக்கு மிக வேண்டியவர்களும் அவரால் சில பலன்களை அடைந்தவர்களும் இத்தகைய விமர்சனங்களைச் சற்றே மாற்றிச் சொல்லலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் கருத்து என்பது ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

இந்த உலகத்திடம் எப்படியாவது நல்ல பெயர் வாங்கி விட வேண்டும். அல்லது உயர்ந்த சான்றிதழை வாங்கி விட வேண்டும் என்று சிலர் தமது சுயரூபத்தை மறைத்துக்கொண்டு போலி நாடகம் ஆட முயற்சி செய்யலாம். அதில் தற்காலிக வெற்றியும் பெறலாம். ஆனால் இந்த கெட்டிக்கார உலகத்திற்கு முன்னால் ஒரு மிகச் சிறந்த ஸ்கேன் இயந்திரம்கூட மண்டியிட்டு விடும். அவ்வளவு அருமையாக ஒருவரின் உண்மையான இயல்பை படம்பிடித்து விடுகிறது இந்த உலகம். நாம் செய்யும் எவ்வளவோ செயல்களை கூட்டிக்கழித்துப்பார்த்து மதிப்பெண்களை போட்டு இந்த ஒரு விமர்சனத்தை உடனே வழங்கி விடும்.

சரி அதுக்கு என்ன இப்போ என்ன என்கிறீர்கள் அல்லவா? நம்மைப்பற்றி இந்த ஒருவரின் விமர்சனம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை நாம் உடனே முடிவு செய்தாக வேண்டிய தருணம் வந்து விட்டது.

பள்ளியில், கல்லூரியில் வேலை பார்க்கும் இடத்தில் அல்லது தொழில் புரியும் இடத்தில் கிடைக்கும் சான்றிதழுக்கும் அல்லது குடும்ப வாழ்க்கையில் கிடைக்கும் சாதாரண பாராட்டிற்கும் மயங்கிப்போகும் நாம் வாழ்க்கையில் பெறப்போகும் இந்த நிரந்தர சான்றிதழுக்கான உண்மையாக உழைக்கத் தொடங்க வேண்டும் .

அதற்கான மனமாற்றத்தை உடனே நாம் பெற்றாக வேண்டும். இதுவரை எப்படி வாழ்ந்திருந்தாலும் சரி இனி மிகச்சிறந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் தீர்மானமாக இருக்க வேண்டும்.

இந்த இலக்கை நிர்ணயித்துக் கொண்டால் நம்மிடம் உள்ள கெட்ட எண்ணங்கள், தீயபழக்கங்கள் எல்லாம் தாமாக ஓடி மறைந்து விடும்.

அதை விடுத்து என்னைப் பற்றிய விமர்சனங்களைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் எப்படியோ வாழ்ந்து விட்டுப் போகிறேன் என்று வாழ நினைக்கிறவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை இப்போதே கையோடு எழுதிக் கொடுத்து விட முடியும்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் மைத்திரி நடத்தும் போராட்டம்

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற தனது பதவியை மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர்களுடன் மைத்திரிபால சிறிசேன தனித் தனியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். இக்கலந்துரையாடலானது காலியிலுள்ள கலுவெல்ல சினமன் ஹில்டொப் விடுதியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் எந்தவொரு அறிக்கையாளர்களோ, செயலர்களோ அல்லது அதிகாரிகளோ அனுமதிக்கப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை ஒவ்வொருவராக அழைத்து கலந்துரையாடலை மேற்கொண்டார். இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தேர்தல் பிரச்சினைகள், எதிர்காலத்தில் தமது கட்சியின் சார்பாக தேர்தல் பணிகளில் ஈடுபடுவதில் ஏற்படும் இடர்கள் தொடர்பாக எடுத்துக் கூறினார்.

இவ்வாறான சந்திப்பை பெரும்பாலும் ஒவ்வொரு வாரமும் மேற்கொள்வதற்கு தான் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். இந்தச் சந்திப்பானது நள்ளிரவு 11 மணி வரை இடம்பெற்றது.

மீண்டும் மறுநாள் முற்பகல் 10 மணி வரை ஜனாதிபதி தனது கட்சி உறுப்பினர்களை தனித்தனியாகச் சந்தித்தார். இதன் பின்னர் உலங்குவானூர்தி மூலம் பொலநறுவைக்குப் புறப்பட்டார்.

பொலநறுவை, கதுறுவெல பிரதேசத்தில் மும்மொழி தேசிய பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல்லை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டினார்.

இந்த நிகழ்வில் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் இந்தியாவின் உயர் ஆணையாளர் தரண்ஜித் சிங் சந்துவும் கலந்து கொண்டார்.

இதேவேளை கலுவெல்ல சினமன் ஹில்டொப் விடுதியில் ஒன்று கூடியிருந்த சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமை மதிய உணவு இடைவேளை வரை செயலமர்வு ஒன்றில் ஈடுபட்டனர். இவர்கள் இந்தச் செயலமர்வில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பாகவும் இதில் சுதந்திரக் கட்சிக்கான வாக்குகளை எவ்வாறு பலப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

பல்வேறு தேர்தல் தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகங்களைத் திறப்பது தொடர்பாகவும் கட்சி உறுப்புரிமையை அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இது உண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான ஒரு சவாலான பணியாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது தன்னுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியை அமைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியை மட்டுமல்லாது மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியையும் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட வேண்டிய நிலையிலுள்ளது.

பொதுஜன முன்னணியில் மகிந்தவிற்கு விசுவாசமானவர்களும் முன்னர் சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்தவர்களுமே உறுப்பினர்களாக உள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளியன்று தனது தேர்தல் தொகுதியான பொலநறுவைக்குப் பயணம் செய்த போது வட மத்திய மாகாண சபையைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் 13 உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து விலகி மகிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுசன முன்னணியில் இணைந்து கொண்டனர்.

இவ்வாறான கட்சி தாவல்கள் இனியும் இடம்பெறலாம் என்கின்ற ஊகிப்பின் காரணமாகவே மூன்று மாகாண சபைத் தேர்தல்களை ஜனாதிபதி பிற்போட்டுள்ளார். இதில் வடமத்திய மாகாணமும் ஒன்றாகும்.

மைத்திரியின் தேர்தல் தொகுதியான பொலநறுவை உள்ளடங்கியுள்ள வடமத்திய மாகாண சபையின் காலப்பகுதி செப்டெம்பர் 30இல் முடிவடைந்து விட்டது.

இதேபோன்று சப்ரகமுவ மாகாண சபையின் காலப்பகுதியானது செப்டெம்பர் 26 இலும் கிழக்கு மாகாண சபையின் காலப்பகுதி ஒக்டோபர் 01 உடன் முடிவடைந்தது. இந்நிலையில் இந்த மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களையும் ஜனாதிபதி பிற்போட்டுள்ளார்.

மைத்திரிக்கு எதிராக கடந்த சில மாதங்களாக அவரது வட்டாரங்களிலிருந்து மிகப் பலமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மைத்திரி ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாக நடப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தி னர்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மிக முக்கிய பொருளாதார மற்றும் சமூக சேவைப் பொறுப்புக்களை வழங்கியதால் தமது வாக்காளர்களின் அதிருப்திக்கு ஆளாகி வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வாறான விமர்சனத்தை முன்வைத்த அமைச்சர்களில் ஒருவரான சுசில் பிறேமஜயந்த வெளிநாட்டிற்குச் சென்றதால் காலியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திப்பில் கலந்து கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி மைத்திரி ஐ.தே.க சார்பாகச் செயற்படுவதாக விமர்சனம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலிப் விஜேசேகர மற்றும் சுசந்த புஞ்சிநிலமே போன்றோர் காலிச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.



இவ்வாறான விமர்சனங்களை முன்வைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டீ சில்வா மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா ஆகியோர் காலிச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

காலிக் கலந்துரையாடலுக்குச் சென்ற போதும் மைத்திரிபால சிறிசேனவுடன் தனியான சந்திப்பை மேற்கொள்ளாத அமைச்சர்களில் சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க, துமிந்த திஸாநாயக்க மற்றும் மகிந்த அமரவீர ஆகியோர் உள்ளடங்குவர்.

தாங்கள் ஜனாதிபதியுடன் அடிக்கடி சந்திப்புக்களை மேற்கொள்வதால் மைத்திரியுடன் தனிப்பட்ட சந்திப்பை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை என இந்த அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்த அடிப்படையில், மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான திருத்தச் சட்ட வாக்களிப்பிலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இந்த வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னரே, காலியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களைத் தனித்தனியாகச் சந்தித்தார்.

இதன் மூலம் கட்சிக்குள் உள்ள வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் களைந்து கொள்ள முடியும் என்கின்ற நம்பிக்கையிலேயே இச்சந்திப்பை மைத்திரி மேற்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் சுயேட்சை என்ற பெயரில் எதிர்க்கட்சி வரையில் அமர்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்ற சந்தேகத்தின் பேரில் இதனை முறியடிப்பதற்காகவும் மைத்திரியால் இத்தனிச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்படாத உறுப்பினர்களை அதிலிருந்து விலக்குவது தொடர்பான முக்கிய தீர்மானம் ஒன்றை ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வாறான உறுப்பினர்கள் கட்சிக்கு இழுக்கு ஏற்படுத்தும் விதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான காணொலிகளைச் சேகரிப்பதற்கான காணொலிக் கருவிகளும் தற்போது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.



வழிமூலம் -சண்டே ரைம்ஸ்
மொழியாக்கம்- நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோஹிஞ்யா முஸ்லிம்கள் தொடர்பான

# உளவுத்துறை அறிக்கையை கணக்கில் கொள்ளாதது ஏன்?

கல்கிஸையில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் தங்க வைக்கப்பட்டிருந்த குடியிருப்பை சுற்றி வளைத்து அத்துமீறல்கள் இடம் பெறலாம் என தேசிய உளவுத் துறை எச்சரிக்கை விடுத்திருந்தும், அவ்வாறான நிலைமையை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிய வருகின்றது.

கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி, பிக்குகள் தலைமையிலான குழுவினர் கல்கிஸையில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றினை சுற்றிவளைத்து ரோஹிஞ்யா அகதிகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் கட்டடம் மீது தாக்குதல் நடத்தியும் கொலை அச்சுறுத்தல் விடுத்தும் அத்துமீறல்களைப் புரிந்தனர்.

எனினும் அந்த சம்பவத்துக்கு இரு நாட்களுக்கு முன்னர் இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கை ஒன்றுக்கு ஒரு குழுவினர் தயாராவது குறித்து தேசிய உளவுத் துறை பாதுகாப்புத்துறையை எச்சரிக்கை செய்துள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் அதனை தடுப்பதற்கு பாதுகாப்புப் பிரிவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதனையும் முன்னெடுக்காமை தொடர்பில் பாதுகாப்பு ஆய்வாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (இ-7)

# பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்



பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி நேற்று திங்கட்கிழமை இருவேறு இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்து வரும் நகுலேஸ்வரி புள்ளநாயகம் திருக்கோயில் வலயக் கல்விப் பணிப்பாளராக திங்கட்கிழமையிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யக்கோரி கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கும் வகையில் பிரதேச செயலாளர்களிடம் ஆர்ப்பாட்டக் காரர்களால் மகஜர்களும் சமர்ப்பிக்கட்பட்டன. (இ-7)

# இயற்கை அனர்த்தங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

## சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் பல தரப்பினருடைய ஒருங்கிணைந்த செயற்பாடே வெற்றியளிக்கும் என புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுவின் (APAD Sri Lanka) ஏற்பாட்டில் இடர் முகாமைத்துவ த்தில் இணை செயற்பாடு எனும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள யுஎஸ் தனியார் விடுதியில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் ஆரம்பித்து வைத்ததுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

அந்த வகையில் அரச அதிகாரிகள் தமது கருத்துக்களை முன்வைக்கையில் முகாமைத்துவ செயற்பாடுகளில் அதிகூடிய பங்களிப்பை தனியார் நிறுவனங்கள் வகுத்து வருகின்றன.

அவர்களின் பங்களிப்பை மேலும் விருத்தி செய்வதற்கு யாழ்.மாவட்டத்தில் தனியாார் துறையினர் தமது வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான தளம் அமைக்கப் படவேண்டும்.

எமது மாவட்டத்தில் அனர்த்த முன்னாயர்த்த நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அதை சரிவர மேற்கொள்வதற்கு சிவில் அமைப்புக்கள் முக்கியமாக ஒன்றிணைய வேண்டும்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் என மூன்று தரப்பினருக்கும் இச் செயற்பாட்டில் பங்குள்ளது. சூழலை நாம் சுத்தம் செய்வதற்கும் எமது பங்கு மிகவும் அவசியமாக உள்ளது.

மேலும் அனர்த்தம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்தி விட்டு செல்வது போல் தான் பலருடைய செயற்பாடுகள் உள்ளன. அதை தொடர்ச்சியான நடவடிக்கையாக கொண்டு செயற்பட வேண்டும்,

ஒரு பிரதேசத்துக்கு வெள்ளம், வரட்சி ஏற்படுவது என்பது வழமை. ஆனால் விழிப்பணர்வு என்பது மிக முக்கியமானது. அந்த விழிப்புணர்வுகளை பின்பற்றுவதற்கு அரச திணைக்களங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கு அழிவு என்பது இயற்கை அனர்த்தம் அல்ல. அது மனிதனால் உருவாக்கப்பட்ட நிகழ்வாக தான் கருதுகிறோம். மழையும் வரட்சியும் எமது பிரதேசத்துக்கு மிகவும் அருமையான விடயம். அதை நாம் அனர்த்தமாக மாற்றுகிறோம் என்பது தான் உண்மை.

புவியியல் அமைப்பில் அனைத்து மாவட்டங்களையும் விட யாழ்.மாவட்டம் மிகவும் சிறப்பான மாவட்டமாக உள்ளது. எமக்கென இறைவன் தந்த கொடையை நாம் சேமிப்பதும் குறைவு, தூய்மையாக்குவதும் குறைவு என்பதால் அனர்த்தம் ஏற்படுகிறது.

மாவட்டத்தின் அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி என நாம் அதை நோக்கியே செல்கிறோம். ஆனால் இளைஞர்களின் விருப்பு, வெறுப்புக்கள், அவர்களின் பொழுதுபோக்கு தொடர்பாக எவ்வளவு தூரம் முதலீடு செய்து அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளோம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இளைஞர்களின் உளவியல் வளப்படுத்தப்படவில்லை. அவர்களின் பொழுது போக்குக்கான எதிர்பார்ப்புக்களை நாம் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

சமூக ஒற்றுமைக்கான வேலைகளை அரச தனியார் திணைக்களங்கள் மேற்கொள்ளும் போது அவை அனைத்து தரப்பினருடனும் ஆராயப்பட வேண்டும்.

வெள்ளத்துக்கு முன்னரான காலப்பகுதியில் ஒழுங்கான முறையில் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசங்களை அடையாளப்படுத்தினால் இடர்களை தவிர்த்துக்கொள்ள முடியும். அவை அனைத்துத் தரப்பினரின் ஒருங்கிணைப்பின் ஊடாக செய்யப்பட வேண்டும்.

அப்போது தான் எமது பகுதியில் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களை குறைத்துக்கொள்ளவும் முடியும். மேலதிக செலவீனங்களை தவிர்த்துக்கொள்ளவும் முடியும்.

யாழ்.மாவட்டத்தில் 82 கிராமங்கள் வரட்சியால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகிறது. முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை அனைவரும் சேர்ந்து மேற்கொண்டால் அனர்த்தத்தில் இருந்து கிராமங்களை மேம்படுத்த முடியும். அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளில் நாம் வெற்றி கொள்ளவும் முடியும் என பல கருத்துக்களை முன்வைத்திருந்தனர். (இ-9)

## வடக்கு மாகாண சபையின்

# அரசியல் அறம் தாழ்ந்து போயுள்ளது

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு





வடக்கு மாகாணசபை பலம் பெற்று விடக் கூடாது என்பதற்காகத் தெற்கு முன்னெடுத்த சதிக்கு எம்மவர்கள் சிலரும் தெரிந்தோ தெரியாமலோ துணை போனதன் மூலம் வடக்கு மாகாணசபையின் அரசியல் அறம் தாழ்ந்து போயுள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

தாவடி வேதவிநாயகர் விளையாட்டுக்கழகத்தின் வாணிவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

கல்வி, செல்வம், வீரம் ஆகிய முப்பெரும்வளங்களைத் தருமாறு மூன்று பெருந் தேவிகளை வேண்டி நவராத்திரி விழாவைக் கொண்டாடி வருகிறோம். இம்மூன்றும் வாழ்க்கைக்கு அவசியமானவை. இவற்றில் ஒன்று இல்லாமற போனாலும் மற்றையவற்றைத் தக்கவைக்க முடியாது. ஆனால், இம்மூன்று வளங்களும் கிடைத்தும் இவற்றில் அறம் இல்லாது போனால் வாழ்க்கையே முழுமை பெறாது.

அறம் என்றால் மாசு இல்லாத மனசு என்கிறது திருக்குறள். கல்வி அறிவு எவ்வளவுதான் இருந்தாலும் அந்த அறிவு ஆக்கத்துக்கு அல்லாமல் அழிவுக்குப் பயன்படுத்தப் பட்டால், செல்வம் எவ்வளவு தான் குவிந்தாலும் அது உழைப்பால் அல்லாமல் குறுக்கு வழியில் தேடிய சொத்தாக இருந்தால், எவ்வளவுதான் பலம் பொருந்தியவராக இருந்தாலும் அந்த வீரம் நேருக்கு நேராக அல்லாமல் முதுகில் குத்தும் துரோகமாக இருந்தால் அறம் பிழைத்துவிடும். கடைசியில், என்றோ ஒருநாள் அதற்கான விளைவை அனுபவித்தே தீரவேண்டி வரும்.

பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக நாங்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் விடுதலைக்கானது என்பதில் அதற்கான அறம் உள்ளது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் இந்த அறம் எமக்கான தீர்வைத் தேடித்தரும். ஆனால், அதனை நோக்கிப் பயணிக்க வேண்டிய அரசியல்வாதிகள் பலரின் அரசியல் அறம்தான் கேள்விக்குறியாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 12 வயது சிறுவனுக்கு சித்திரவதை; அண்ணனும் அண்ணியும் கைது

(கொழும்பு)

12 வயதுச் சிறுவனை, சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அச்சிறுவனின் மூத்த சகோதரனும் அவருடைய மனைவியும் (அண்ணியும்) கைது செய்யப் பட்டுள்ளனர் என்று கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வதேச சிறுவர் தினமான நேற்று முன்தினம் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவ்விருவரையும் கைதுசெய்துள்ளதாகவும் அச்சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# திருட்டு குற்றச்சாட்டில் குடும்பப் பெண் கைது!

தங்க நகைகள் திருடிய குற்றச்சாட்டின் பேரில் குடும்பப் பெண் ஒருவர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு போனமை தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலை யத்திற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த திருட்டுடன் தொடர்புடைய கிளிநொச்சியைச் சேர்ந்த (வயது-45) குடும்பப் பெண்ணொருவர் கிளிநொச்சிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மாணவர்களுக்கும் 13 வருட உத்தரவாதக் கல்வி

## 42 தேசியப் பாடசாலைகளில் திட்டம் ஆரம்பம்

அனைத்து மாணவர்களுக்கும் 13 வருட உத்தரவாதக் கல்வியை வழங்கும் புதிய திட்டம் நாடு முழுவதிலுமுள்ள 42 தேசியப் பாடசாலைகளில் ஒக்டோபர் முதல் வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ள இம்முயற்சியின் விளக்கமளிப்பு நேற்று திங்கட்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியப் பாடசாலைகளில் இடம்பெற்றது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்காக 27 புதிய பாடநெறிகள் இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன.


கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி போதுமான புள்ளிகளைப் பெறாத 4419 மாணவர்கள் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கு எழுத்து மற்றும் அதுசார்ந்த வேலைகள் குறைக்கப்பட்டு செயற்பாடுகள் சார்ந்ததாக கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளன.

பிரேரிக்கப்பட்டுள்ள 27 பாடநெறிகளும் தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை சார்ந்த பாடங்களாகும்.

இந்த பாடத்திட்டத்தில். உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு, விளையாட்டு, உடற்கல்வி மற்றும் கிராஃபிக் வடிவமைப்பு, ஃபேஷன் வடிவமைப்பு, கட்டுமான தொழில்நுட்ப ஆய்வு, நீர் வளங்கள் தொழில்நுட்ப ஆய்வு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# விசித்திர வாழைக்குலை



மட்டக்களப்பு காரைதீவு முதலாம் பிரிவு விபுலானந்த வீதியிலுள்ள வீடொன்றில் வாழை மரத்தின் இடை நடுவில் இருந்து வாழைக் குலை வெளிவந்துள்ளது.

வாழை மரத்தின் மேற் பகுதியில் இருந்தே குலை உருவாகுவது வழமையாக உள்ள போதிலும், இந்த வாழைமரம் சற்று வித்தியாசமான முறையில் காணப்படுகின்றமை அப்பகுதி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. வாழை மரத்தின் அடியில் இருந்து 2 அடி உயரத்தில் இடை நடுவில் இவ்வாறு வாழைக்குலை வெளிவந்துள்ளது.

6 அடி உயரமான இந்த வாழை மரத்தின் அடிப்பாகத்தில் 2 அடி உயரத்தில் சுமார் 4 சிறிய சீப்புகளுடன் இந்த வாழைக்குலை காணப்படுகின்றது.

இந்த விநோதமான வாழை மரத்தை அப்பகுதியிலுள்ள மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (இ-7)



யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலய திருச்சொரூப பவனி நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# உத்தியோகபூர்வ இணைப்பு



(கொழும்பு)

கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோகபூர்வ செயலாளராக அங்கீகரிக்கப்பட்டதை உறுதிப்படுத்தி தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட கடிதம் கட்சி தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமால் நேற்று முன்தினம் கட்சியின் செயலாளருக்கு தாருஸ்ஸலாமில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1207

Search for people, places and things Nagendram Home

### கலையரசி





### சகாதேவன்




### சாவித்திரி





### சுகுணாமினி




### தேவிகா




### கஜீபன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்பழக்கத்திலிருந்து ஆண்களை விடுவிப்பதற்கு ஐந்தாண்டு திட்டம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை



இலங்கையில் புகைத்தல் பழக்கத்திலிருந்து ஆண்களை விடுவிக்கும் ஐந்தாண்டு வேலைத் திட்டமொன்று சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் படி ஆண்களில் இருவரில் ஒருவர் புகைத்தல் பழக்கமுடையவர்கள் என உள்நாட்டில் இனம் காணப்பட்டுள்ள நிலையில் 2030ஆம் ஆண்டு அந்த விகிதத்தை 5 சதவீதமாக குறைப்பதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்திற்கு பிரிட்டன் 20மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

ஆண்களை புகைத்தல் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் வகையில் 15 நாடுகளில் ஐந்தாண்டு வேலைத் திட்டம் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கை அதில் முதலிடத்தில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புகையிலை பாவனையை கட்டுப்படுத்தல் தொடர்பாக இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களிலும் அது தொடர்பான சட்டங்களை அமுல்




படுத்துவதிலும் முன்னேற்றத்தை காண முடிவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் கருதுகிறது.

இலங்கையில் தற்போது சுமார் 35 ஆயிரம் பேர் புகையிலை செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 2020ஆம் ஆண்டு புகையிலை செய்கையை முற்றாக நிறுத்த சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

உள்நாட்டில் புகைத்தல் பழக்கம் காரணமாக வருடாந்தம் 25 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். 5 சதவீதமான பிள்ளைகளும் அதனால் பாதிப்புக்குள்ளாகுவதாக சுகாதார அமைச்சரான டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் ஏற்கனவே சிகரெட் பெட்டிகளில் 80 சதவீதம் படத்துடன் கூடிய புகைத்தல் பற்றிய எச்சரிக்கை அச்சிடப்பட்டுள்ளது. புகையிலைக்கு 90 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. உலகிலே புகையிலைக்கு அதிக வரி இலங்கையில் தான் விதிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இது போன்ற நடவடிக்கைகளினால் உள்நாட்டில் புகைத்தல் பழக்கமுடையவர்களின் எண்ணிக்கை தற்போது 46 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளதாக சுகாதார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

"எதிர்காலத்தில் மேலும் சில நடவடிக்கைகளை சட்ட ரீதியாக முன்னெடுக்கவுள்ள நிலையில் இந்த சதவீதத்தை மேலும் குறைக்க முடியும்" என டாக்டர் ராஜித சேனாரட்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"குறிப்பாக கடைகளில் தனியாக சிகரெட் விற்பனை முற்றாக தடை செய்யப்படவுள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எதிர்காலத்தில் எவ்வித படமும் இன்றி வெறும் வெள்ளையாக சிகரெட் பெட்டி அறிமுகம் செய்யப்படும் . பாடசாலைகள் அமைந்துள்ள இடத்திலிருந்து 500 மீற்றர் எல்லைக்குள் சிகரெட் மற்றும் புகையிலை பொருட்கள் விற்பனை செய்ய சட்ட ரீதியாக தடை செய்யப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 7 ஆயிரம் வீடுகளில் வெடிப்பு

# உமா ஓயா திட்டத்தால் 5000 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

உமாஓயா திட்டத்தால் ஏற்பட்டு வரும் பாதிப்புக்களை கருத்திற் கொண்டு திட்டத்துக்கு அண்மித்ததாக வசிக்கும் சுமார் ஐயாயிரம் குடும்பங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக வாழ வைக்க சிறிய நகரமொன்றை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உமா ஓயா சுரங்க வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதில் இருந்து பதுளை, பண்டாரவளை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளில் அதிகளவில் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மண்சரிவுகள், நீர் நிலைகள் வற்றிப்போதல் மற்றும் வாழ்வாதாரம் உள்ளிட்ட பாதிப்புக்களால் அப்பகுதியில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் மிகவும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

இப்பகுதியில் வேலைத் திட்டங்களை ஆரம்பித்த நிலையில் உமா ஓயா திட்டத்தால் ஏழாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் வெடிப்புக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் பல பகுதிகளில் சேதங்கள் தொடர்வதாக கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் முதற் கட்டமாக பதுளை மாவட்டத்தில் 5000 குடும்பங்களை அகற்றுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. மாவட்டத்தில் காணி தட்டுப்பாடு நிலவுவதுடன், புதிய வேலைத்திட்டங்களின் கீழ் வீடுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இதன் பிரகாரம், பதுளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான சிறியநகரமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## முற்றுகை

கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உப்பாறு பாலத்தில் இருந்து சுமார் 4 கி[illegible] மீற்றர் தூரத்தில் உ[illegible] நன்னீர் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடம் ஒன்று நேற்றுக்காலை கிண்ணியா பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

கிண்ணியா பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக விசேட குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-7)



சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் பனை அபிவிருத்திச் சபையினர் பனங்கைப் பணிப் பயிற்சி பெற்ற பெண்களுக்கு பனங்கைப் பணி உற்பத்தியை மேற்கொள்வதற்கான 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

(படங்கள்:-சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி ஒழியாது

## அரச தரப்பு உறுதியான நிலைப்பாடு

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி தன்மையை எந்த வழியிலும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அமைந்திருக்காது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள தலாவ, கஹட்டகஸ்திஹிலிய பகுதிகளில் நடந்த ஐ.தே.கவின் கூட்டங்களில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"டி.எஸ். சேனநாயக்கவின் காலத்தில் இருந்து இந்த நாடு ஒற்றையாட்சி நிலையில் இருந்து வருகிறது.

1972ஆம் ஆண்டு ஒற்றையாட்சித்தன்மை நாடாளுமன்றத்தின் மூலம் சட்டபூர்வமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

நாட்டின் ஒற்றையாட்சித் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில், அதிகாரங்களைப் பகிரும் வகையில் 1987ஆம் ஆண்டு 13ஆவது திருத்தச்சட்டம், கொண்டு வரப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் அனுமதியுடன் இது செய்யப்பட்டது

முன்மொழியப்பட்டுள்ள, புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி தன்மையை எந்த வழியிலும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அமைந்திருக்கவில்லை. ஒற்றையாட்சிக்குள் கூடுதல் அதிகாரப்பகிர்வைத் தான் இது கோருகிறது.

புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சித் தன்மையை நீர்த்துப் போகச் செய்யும், நோக்கிலான எந்தவொரு பிரிவும் உள்ளடக்கப்படாது என அவர் திட்டவட்டமாக கூறினார். (இ-7)



வல்வெட்டித்துறை வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணிவிழா நிகழ்வு கடந்த 28ஆம் திகதி சனசமூக நிலையத் தலைவர் த.ஸ்ரீதர்சன் தலைமையில் நடைபெற்றது.

## ரோஹிஞ்யா அகதிகள் மீது தாக்குதல் 6 பேர் கைது; நால்வர் மறியலில்

மியன்மார் ரோஹிஞ்யா அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கல்கிஸையில் உள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், இதுவரையிலும் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் பெண். கைதானவர்கள் கல்கிஸை நீதவான் நீதிமன்ற நீதவான் சம்ருவன் ரொட்றிகோ முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, 9ஆம் திகதி நடைபெறும் அடையாள அணிவகுப்பில் இவர்கள் நால்வரையும் உட்படுத்துமாறும், நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்றும் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல, வெல்லம்பிட்டியைச் சேர்ந்த டான் என்றழைக்கப்படும், சுரேஷ் பியசாத், கனேமுல்ல, கலஹின் கொடையைச் சேர்ந்த ஜனித நிரோஷன் தீபகே, எடேரமுல்லை தெற்கு, அக்பார் நகரத்தைச் சேர்ந்த நாவலகே தொன் ஷிந்தனகே சஞ்ஜீவ மற்றும் நாவல, கொஸ்வத்த வீதியைச் சேர்ந்த மதுசங்க சேனவிரத்ன ஆகிய நால்வருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த சந்தேகநபர்களை, கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மியன்மார் ரோஹிஞ்யா அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த, கல்கிஸையில் உள்ள வீட்டின் மீது, பௌத்த தேரர்கள் அடங்கிய குழுவினர் கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து, அங்கிருந்த 30 அகதிகளும், கல்கிஸை பொலிஸாரின் பொறுப்பின் கீழ், கொண்டுவரப்பட்ட, நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம், அவர்களின் பாதுகாப்பைகவனத்தில்கொண்டு, காலி பூஸா முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அந்த பூஸா முகாமை சுற்றிவளைத்து, பௌத்த அமைப்புகள் சில, கடந்த சனிக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு, திட்டமிட்டிருந்தன. எனினும், தடுப்பு முகாமுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு, காலி நீதவான் நீதிமன்றம் தடை விதித்துவிட்டது.

இதேவேளை, மியன்மாரிலிருந்து இங்கு வருகை தந்துள்ள ரோஹிஞ்யா அகதிகளை நாடுகடத்துமாறும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்குமாறும் கோரி, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் காரியாலயத்தில், கடந்த 27ஆம் திகதியன்று மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## விபுலாநந்தர் மாநாடு

(கொழும்பு)

சுவாமி விபுலாநந்தரின் பிறப்பின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்து மத அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்துடன் இணைந்து சுவாமி விபுலாநந்தர் மாநாடு ஒன்றினை இம்மாதம் 05, 06, 07 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா அழகியல்கற்கைகள்நிறுவகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநாடு சுவாமி விபுலாநந்தரின் அறிவு, ஆற்றல்களையும் அவரது பணிகளையும் அவற்றால் தமிழ் கூறு நல்லுலகம் எய்திய பயன்களையும் எடுத்துரைப்பனவாக அமையும். அருளாளர்களும் அறிஞர்களும் சமூகப்பிரமுகர்களும் கலந்து கொண்டு ஆற்றும் உரைகள் கலைஞர்களும் மாணவர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகள், நூல் வெளியீடு, நூற்கண்காட்சி, அறிஞர் கௌரவிப்பு, சுவாமி விபுலாநந்தர் வரலாற்று அறிவுப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு, கலாசார ஊர்வலம் என்று பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டதாக அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வாக்காளர் பட்டியல் 12-ம் திகதி வெளியாகும்

வாக்காளர் பட்டியல் வெளியிடும் தினத்தை தேர்தல்கள் திணைக்களம் பிற்போட்டுள்ளது. வாக்காளர் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிடுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தயாராகியிருந்தது. எனினும், மாகாண சபைகள் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதை அடுத்தே, பட்டியல் வெளியிடும் திகதியும் பிற்போடப்பட்டுள்ளது என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்இடாப்பு பட்டியல், எதிர்வரும் 12ஆம் திகதியன்றே வெளியிடப்படும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையிலேயே மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் என்பன நடைபெறவுள்ளன என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

## துப்பாக்கி ரவை வைத்திருந்த அமல் சில்வாவுக்குப் பிணை

(கொழும்பு)

துப்பாக்கி ரவைகளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## நூல் அறிமுக நிகழ்வு

சி.கா.செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை நூல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் 5ஆம் திகதி போயா தினத்தில் முற்பகல் 10.30 மணிக்கு மாத்தளை அருணாலோக உணவக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அரசியல் ஆய்வாளர் மோகன தர்ஷினி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இந்நூல் குறித்த அறிமுக உரையை டேவிட் சுரேன், மதிப்பீட்டு உரையை பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.பாஸ்கரன், [illegible] ஹமீட், அரசியல் செயற்பாட்டாளர் செ.மோகன்ராஜ ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றியைத் தீர்மானிப்பது எது?

இரு நாட்டுப் படைகளுக்கும் இடையே வெகு மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது.

எதிரி நாட்டுப் படையிடம் கிட்டத்தட்ட தோற்றுவிட்ட நிலை. ஆனாலும் தாய் நாட்டுப் படைத் தளபதிக்கு போரை இழக்கமாட்டோம் என்ற அசாத்திய நம்பிக்கை. ஆனால் துணைத் தளபதி உள்ளிட்ட அவன் வீரர்களுக்கு அந்த நம்பிக்கை சிறிதும் இல்லை. எல்லோரும் பின்வாங்குவதில் குறியாக இருந்தனர்.

என்னதான் நம்பிக்கை இருந்தாலும், வீரர்களில்லாமல் தனி ஆளாய் என்ன செய்ய முடியும்?

கடைசி நாள் சண்டை. போர்க்களத்துக்குப் போகும் வழியில் ஒரு கோயிலைக் கண்டார்கள்.

உடனே தளபதி வீரர்களை அழைத்து. "சரி வீரர்களே நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இதோ இந்தக் கோயிலுக்கு முன் ஒரு நாணயத்தைச் சுண்டிவிடுகிறேன். அதில் தலை விழுந்தால் வெற்றி நமக்கே. பூ விழுந்தால் நாம் தோற்பதாக அர்த்தம். இப்படியே திரும்பிவிடுவோம்வெற்றியா தோல்வியா.. நமக்கு மேல் உள்ள சக்தி தீர்மானிக்கட்டும் சரியா?"

"ஆ.. நல்ல யோசனை அப்படியே செய்வோம்"



நாணயத்தைச் சுண்டினான் தளபதி. காற்றில் மிதந்து, விர்ரென்று சுழன்று தரையில் விழுந்தது நாணயம்.

தலை!

வீரர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். வெற்றி வெற்றி என்று எக்காளமிட்டபடி போர்க்களம் நோக்கி ஓடினர். வெகு வேகமாக சண்டையிட்டனர் எதிரி நாட்டவர்களோடு.

அட.. என்ன ஆச்சர்யம். அந்த சிறிய படை, எதிரி நாட்டின் பெரும் படையை வீழ்த்திவிட்டது!

துணைத் தளபதி வந்தான். 'நாம் வென்று விட்டோம் கடவுள் தீர்ப்பை மாற்ற முடியாதல்லவா" என்றான் உற்சாகத்துடன்.

"ஆமாம் உண்மை தான்" என்ற படி அந்த நாணயத்தை துணைத் தளபதியிடம் கொடுத்தான் தளபதி.

நாணயத்தின் இரு பக்கங்களிலும் தலை!

வெற்றியைத் தீர்மானிப்பது நம்பிக்கை!




- கிமு 2333 - கொஜொசியோன் நாடு (தற்போதைய கொரியா) டங்கூன் வாஞ்சியோம் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- 1739 - ரஷ்ய-துருக்கி போர், 1736-1739 முடிவில் ரஷ்யாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1778 - பிரித்தானியாவின் கப்டன் ஜேம்ஸ் குக் அலாஸ்காவில் தரையிறங்கினார்.
- 1908 - பிராவ்தா செய்திப்பத்திரிகை லியோன் ட்ரொட்ஸ்கியினாலும் அவரது சகாக்களினாலும் வியென்னாவில் வெளியிடப்பட்டது.
- 1918 - மூன்றாம் போரிஸ் பல்கேரியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1929 - சேர்பியா, குரொவேசியா, சிலவேனியா இணைக்கப்பட்டு அதற்கு யூகொஸ்லாவிய இராச்சியம் எனப் பெயரிடப்பட்டது.
- 1932 - ஈராக், பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- 1942 - விண்வெளிப் பறப்பு: செருமனியில் இருந்து ஏ4-ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது. முதன்முதலில் விண்வெளியை அடைந்த மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள் இதுவாகும்.
- 1952 -ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1962 - சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல்லி ஷீரா 6 தடவை பூமியைச் சுற்றினார்.
- 1981 - வட அயர்லாந்து, பெல்பாஸ்ட் நகரில் "மேஸ்" சிறைச்சாலையில் ஐரிஷ் குடியரசு இராணுவக் கைதிகளின் ஏழு மாத உண்ணாநோன்பு முடிவுக்கு வந்தது. 10 பேர் இறந்தனர்.
- 1985 - அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1990 - ஜேர்மனியின் கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது.
- 1993- சோமாலியாவின் போர்பிரபு முகம்மது ஃபரா ஐடிட் என்பவனின் தலைமையிலான ஆயுதக் குழுவினரைப் பிடிக்க எடுத்த முயற்சியில் 18 அமெரிக்கப் போர் வீரர்களும் 1,000 சோமாலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2001 - வங்காள தேசத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் கலீதா சியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சி வெற்றி பெற்றது.
- 2013 - இத்தாலியில் ஆப்பிரிக்கக் குடியேறிகளை ஏற்றி வந்த படகு மூழ்கியதில் 300 பேர் வரையில் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

- 1854 - எர்மேன் சுத்ரூவ, உருசிய வானியலாளர் (இ. 1920)
- 1917 - பீட்டர் கெனமன், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (இ. 1997)
- 1940 - முரு. சொ. நாச்சியப்பன், மலேசிய எழுத்தாளர்
- 1954 - சத்யராஜ், தமிழ்த் திரைப்பட நடிகர்
- 1957 - இராபர்ட்டோ செவெதோ, உலக வணிக அமைப்பின் 6வது தலைவர்
- 1988 -அலிசியா விகண்டேர், சுவீடிய நடிகை

இறப்புகள்

- 1226 - அசிசியின் பிரான்சிசு, இத்தாலியப் புனிதர் (பி. 1181)
- 1867 - எலியாஸ் ஓவே, தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த அமெரிக்கர் (பி. 1819)
- 1962 - கந்தையா கனகரத்தினம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1892)
- 1966 - ரோல்ப் மாக்சிமில்லன் சீவெர்ட், சுவீடிய இயற்பியலாளர் (பி. 1896)
- 1995 - ம. பொ. சிவஞானம், தமிழக எழுத்தாளர், அரசியல்வாதி (பி. 1906)
- 1999 - அக்கியோ மொறிட்டா, சப்பானியத் தொழிலதிபர் (பி. 1921)
- 2009 - எஸ். இராமச்சந்திரன், இலங்கையின் மலையக ஓவியர் (பி. 1942)
- 2011 - ஆ. கந்தையா, ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1928)
- 2015 -ஏ. ஆர். எம். அப்துல் காதர், இலங்கை அரசியல்வாதி (பி. 1936)

சிறப்பு நாள்

- இணைப்பு நாள் (செருமனி)
- விடுதலை நாள் (ஈராக், 1932)
- சர்வதேச போராட்ட தினம்
- வெளி இணைப்பு




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சா | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 160 | 180 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 350 | 500 | 350 | 600 | 300 |
| தக்காளி | 160 | 200 | 100 | 140 | 120 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 40 | 60 | 80 | 60 | 80 |
| கோவா | 150 | 160 | 80 | 160 | 140 | 160 | 80 |
| கரட் | 100 | 200 | 90 | 200 | 120 | 200 | 80 |
| பூசணி | 60 | 40 | 30 | 60 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 100 | 70 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 260 | 280 | 200 | 250 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 80 | 140 | 90 | 120 | 140 |
| பாகற்காய் | 300 | 400 | 250 | 400 | 140 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 160 | 70 | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 150 | 120 | 70 | 100 | 80 | 160 | 140 |
| லீக்ஸ் | 150 | 180 | 240 | 200 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 70 | 80 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 200 | 200 | 140 | 200 | 200 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 | 160 | 140 | 200 | 200 |
| போஞ்சி | 220 | 250 | 150 | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 100 | 120 | 180 | 160 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 25 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 300 | 350 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60-90 | 80 | 90 | 75 | 60-100 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 200 | - | - | 400 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 120 | 200 | - | 200 | 150 |
| முள்ளங்கி | 80 | 100 | 25 | 80 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 08 | 20 | 20 | 25 | 30 |
| ஈரப்பலா | 60 | 40 | 25 | 80 | - | 80 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகள்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதை சிங்கள மக்களிடம் தெரிவியுங்கள்

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பை எந்தளவுக்கு மறைப்புச் செய்ய முடியுமோ அந்தளவுக்கு மறைப்புச் செய்யப்படுகின்றது.

இது எங்கள் நாடு. நாம் நினைத்தால் எதையும் செய்யலாம் என்ற மமதையில் இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வன்னி யுத்தம் மட்டுமல்ல அதற்கு முன்பாக தமிழ் மக்களுக்கு நடந்த அத்தனை கொடுமைகளும் மறைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மறைப்புச் செய்வதை ஒரு பெரும் சாதனை என ஆட்சியாளர்கள் கருதலாம். ஆனால் இவற்றுக்காக என்றோ ஒரு நாள் இந்த ஆட்சியாளர்களும் சிங்கள மக்களும் வருந்த வேண்டிவரும்.

இப்போதுகூட இடைக்கால"வரைபை வெளியிட்ட அரசு அதனை நிறைவேற்றுவதில் கடும் சவால்களைச் சந்தித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் இடைக்கால வரைபு நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்து என்பது போல கூறிவருகின்றன.

இதனை சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையிலேயே இருக்கின்றனர் எனில் நிலைமை எவ்வாறு உள்ளதென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையிராது.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்கள மக்களால் வலியுறுத்தப்பட வேண்டும்.

அதாவது இந்த நாட்டில் தொடர்ந்தும் இனவாதம் பேசிக்கொண்டு எங்கள் எதிர்காலத்தைப் பாழாக்க முடியாது.

இலங்கை என்ற இந்த நாட்டில் எல்லா இன மக்களும் சகல உரிமைகளுடனும் வாழக்கூடியதான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

தமிழ் முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் சிறுபான்மை என்பதால், அவர்கள் சகல உரிமைகளுடனும் வாழக்கூடாது என நினைப்பது அடிப்படையிலேயே நீதியற்றதாகும் என்ற கருத்துக்களை சிங்கள மக்கள் முன்வைக்கும் போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சுலபமாகிவிடும்.

இவ்வாறான ஒரு முடிவுக்கு சிங்கள மக்கள் வருவதற்கு தமிழ் மக்கள் சந்தித்த இழப்புகள், வன்னிப் போரில் அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்கள்; வன்மங்கள் பற்றியெல்லாம் சிங்கள மக்கள் அறிய வேண்டும்.

சுருங்கக்கூறின் வன்னி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் காணாமல் போயினர். தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன என்ற உண்மைச் செய்தியை எந்தவித திரிவுபடுத்தலுமின்றி சிங்கள மக்களுக்குக் கூறும் போது அவர்களிடம் ஒரு நியாயம் பிறக்கும். தாம் செய்வது தவறு என்ற நினைப்பு ஏற்படும்.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள ஊடகங்களும் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதியை மறைப்புச் செய்து பொய்ப் பிரசாரத்தை சிங்கள மக்களிடம் முன்வைக்கின்றனர்.

தமிழ் மக்கள் பொல்லாதவர்கள் போன்ற காட்சிப்படுத்தல் நடக்க அதற்குள் ஊறியவர்கள் தமிழ் மக்களை எதிராகவே பார்க்கின்றனர். இதனால்தான் தீர்வு என்பதும் கலைகின்றது.

# கடமைகளை சரிவர செய்யாத அரச உத்தியோகத்தர்களால் சமூகத்தில் பல பிரச்சினைகள்

## யாழ்.அரச அதிபர் குற்றச்சாட்டு

அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் சரிவர செய்யாததனாலேயே சமூகத்தில் பல பிரச்சினைகள் உருவாகின்றன என யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

சமூகத்தில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் பலர் காரணமாக உள்ளனர். அவர்கள் தமது கடமைகளை சரிவர செய்தால் பல பிரச்சினைகளை குறைத்து கொள்ள முடியும்.

மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் ஒருசில அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தற்போதுதமதுசேவையை மக்களுக்கு ஆற்றி வருகின்றனர். ஆனால் பலர் தமது வருமானங்களை அதிகரித்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளனரே தவிர சமூகத்துக்கு சேவை செய்ய முன்வருவதில்லை.

எமது சமூகத்தில் அவர்களுக்கு அக்கறை இல்லை. ஏழைகளை மதிப்பதில்லை, மேலும் குற்றச்செயல்களுக்கு துணை போவது போல் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில்லை. சிறுவர்களுக்கு சரியான பாதையை காட்ட முன்வருவதில்லை. அவர்களே சிறுவர்களைத் தீய வழிக்கு இட்டுச்செல்கின்றனர்.

மேலும் எமது பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களுக்கு தொடர்ந்து பொலிஸாரை குற்றம் சுமத்த வேண்டிய தேவையில்லை. நாம் ஒவ்வொருவரும் உரிய முறையில் ஒழுங்காக எமது கடமைகளைச் செய்ய வேண்டும. பொது மக்கள் - அரச அதிகாரிகள் ஒத்துழைத்துச் சேர்ந்து செயற்பட்டால் மாத்திரமே எமது சமூகத்தை திருத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஒத்திகையால் மக்கள் அச்சம்

சுனாமி ஒத்திகை நிகழ்வு முன்னறிவிப்பின்றி செய்யப்பட்டதால் அதை அறியாத மக்கள் பாரிய அனாத்தம் ஏற்பட்டு விட்டதாக கருதி பெரும் பீதியடைந்தனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று முற்பகல் சுனாமி ஒத்திகை நடைபெற்றது.

அதனையடுத்து ஆபத்தான வேளையில்அம்புலன்ஸ் வண்டிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற ஒத்திகை பார்க்கப்பட்டது.

மந்திகைச் சந்தியில் இருநது அபாய ஒலி எழுப்பியவாறு இரண்டு அம்புலன்ஸ்கள் மந்திகையை அண்மிதத சந்திகளூடாக சுமார் 10 நிமிடம் வரையில் ஒத்திகையில் ஈடுபட்டன.

இதனையறியாத மக்கள் நாலாபுறமும் அபாய ஒலி எழுப்பியவாறு அம்புலன்ஸ்கள் சென்றதால் ஏதோ அனாத்தம் நிகழ்ந்துவிட்டதாகக் கருதி வீதிக்கு ஓடி வந்தனர். பின்னர் அது சுனாமி ஒத்திகை என அறிந்ததன் பின்னர் அமைதியடைந்தனர். (இ-60)

## விடுமுறை

வல்லிபுரக்கோயில் தேர்த திருவிழாவை முன்னிட்டு நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குடபட்ட கடைகள் அனைத்திற்கும் நாளை 4 ஆம் திகதி விடுமுறை நாளாக அறிவித்துள்ளது. (இ-60)

## இறுதி ஊர்வலத்தில் விபத்து; இரண்டு பேர் உயிரிழப்பு!

குருநாகல் - தம்புள்ளை வீதியன் கிரிவவ்ல பகுதியில நேற்று முன்தினம் மரணச் சடங்கு இறுதி ஊர்வலத்தின் போது, சடலத்தை ஏற்றிச் சென்ற வாகனத்துடன் லொறி மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

இதன்போது, சடலத்தை ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, அவர்களை, குருநாகல் வைத்தியசாலையில் அனுமதித்த போது பலியாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சம்பவத்தில் 50 மற்றும் 63 வயதான இருவரே உயிரிழந்தனர்.

இது தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## காணிச் சண்டை நால்வர் காயம்

### இருவர் கைது

திருகோணமலை, ஜெயந்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு பிரிவினரிடையே நேற்று ஏற்பட்ட காணிச்சண்டை கைகலப்பாக மாறியதில், நால்வர் காயமடைந்துள்ளனரெனவும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனரெனவும், ஜெயந்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

ஜெயந்திகம மற்றும் சமகிபுர பகுதியைச் சேர்ந்த 44, 37, 54, 60 வயதுடைய நாலவரே, காயமடைந்த நிலையில, கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, ஜெயந்திபுர பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

SHANTHIHAM
Association for Health & Counselling

**உலக உளநல நாள்- ஒக்டோபர் 10**

சரி செய்யப்படாத மன அழுத்தத்தினால் உருவாகக்கூடிய நோய்கள்
- இருதய நோய்கள்
- இழுப்பு/ ஆஸ்துமா
- அதீத உடற் பருமன்
- தலையிடி
- உணவுக்குழாய், குடல் சம்பந்தமான பிரச்சினைகள (குடற்புண்)
- மறதிநோய்
- வேகமாக முதுமையடைதல்
- வயதிற்கு முந்திய மரணம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில, வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும். உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.
- உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத்தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.
- இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.
- மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது தான் மதத்தின் முழுப்பரிமாணமாகும்.
- ஒருவன் தன்னை வெறுக்கத் தொடங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்.
- எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை தவிர்ப்பு உதையில் பலாலி விண்மீன் வெற்றி





மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் (30.09.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து றேஞ்சஸ் மோதியது.

பரபரப்பான ஆட்டம் 0-0 என்ற சமனிலையில் முடிவடைந்தது.நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதை மூலம் பலாலி விண்மீன் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக பலாலி விண்மீன் வீரர் யூட் கெனடி தெரிவு செய்யப்பட்டார். (க)

# சென். அன்ரனிஸ் வி.க நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## பொம்மர்ஸ் வெற்றி





மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் (01.10. 2017) அன்று நடை பெற்ற முதலாவது போட்டியில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து முத்தமிழ் அணி மோதியது. இதில் பொம்மெர்ஸ் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

பொம்மர்ஸ் சார்பாக சாரங்கன்-3 கோலினையும் நிருசாந் -1 கோலினையும் போட்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக பொம்மர்ஸ் அணி வீரர் நிருசாந் தெரிவு செய்யப்பட்டார். (க)

# கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகம் அரையிறுதிக்கு தெரிவாகியது



இருபாலை விளையாட்டுக் கழகம் அண்மையில் நடத்திய அணிக்கு 8 வீரர்கள் பங்கு பற்றிய 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச்சுற்றுப் போட்டியின் காலிறுதிப்போட்டியில் அரசடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது.

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டு கழகம் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (க)


# இறுதிப் போட்டியில் சைனிங்ஸ்




நேதாஜி விளையாட்டுக் கழகம் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திக் கொண்டிருக்கும் பெருவிளையாட்டுக்களின் வரிசையில் அண்மையில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட தொடரில் சைனிங்ஸ் அணி ரேவடி அணியுடனான அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது. (க)

உத்தமன் அதிரடி

# சிநேகபூர்வ கிரிக்கெட் AB அணி அபார வெற்றி



AB அணிக்கும் RAIN BOW அணிக்கும் இடையிலான சினேகபூர்வமான 50 பந்து பரிமாற்றங்களை கொண்டகிரிக்கெட் போட்டியில் ABஅணி 342 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.(01.10.2017)அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்ற AB அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது அதன்படி துடுப்பெடுத்தாடிய AB அணி 50 பந்து பரிமாற்ற நிறைவில் 5இலக்குகளை இழந்து 432 ஓட்டங்களை பெற்றது

AB அணி சார்பாக உத்தமன்-158, ராகுலன்-77, ஞானா-63,ஆதித்தன்-62 ஓட்டங்களை பெற்றனர்

RAIN BOW அணி சார்பாக யதுஷன்-7 பந்து பரிமாற்றங்கள் வீசி 72 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அருன் 10பந்து பரிமாற்றங்கள் வீசி 83 ஓட்டங்களுக்கு 3இலக்குகளையும்காந்தன் 7 பந்து பரிமாற்றங்கள் வீசி 40 ஓட்டங்களுக்கு 1 இலக்குகளையும் கைப்பற்றினர்

பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய RAIN BOW அணி 20.1 என்ற பந்து பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 90 ஓட்டங்களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் செந்தூரன்-34.ரஜிவன்-22. கேதீஸ்-11 ஓட்டங்களையும் பெற்றனர்

பந்து வீச்சில் AB அணி சார்பாக உத்தமன் 6 பந்துபரிமாற்றங்கள் வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் ஞானா 1 பந்துபரிமாற்றங்கள் வீசி 5ஓட்டங்களுக்கு 2 இலக்கு களையும் ஜது 3.5 பந்து பரிமாற்றங்கள் வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (க)

# சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? அரையிறுதி பிற்போடப்பட்டுள்ளது

சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? உதை பந்தாட்டப் போட்டியில் (02.10. 2017)அன்று நடைபெற இருந்த அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணியின் வீரர் ஒருவரின் உறவினரின் மரணவீடு காரணமாக ஞானமுருகன்,றோயல் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி எதிர்வரும் (05.10.2017)வியாழக் கிழமை இரவு பிற் போடப் பட்டுள்ளது என போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு நேரங்களில்...

வில்லை.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் அனைத்து தரப்பினராலும் பொதுமக்கள் மத்தியில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் கடந்து சட்ட நடவடிக்கை எடுப்பதுதான் மிக முக்கியம் ஆகும்.

யாழ்.நகர்ப் பகுதியில் அதிகளவான குற்றச்செயல்களில் இளையோர் ஈடுபடுகின்றனர். அவற்றை தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும்.

இரவு நேரங்களில் கும்பலாக நிற்கும் இளைஞர்களால் வீதியில் சீரான போக்கு வரத்து செய்ய முடிவதில்லை. துணிவுடன் பெண் பிள்ளைகள் நடமாட முடிவதில்லை.

எனவே கூட்டமாக நிற்கும் இளைஞர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். அதற்கு பொலிஸாருக்கு அனுமதி உண்டு என்ற காரணத்தினால் பொலிஸார் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்பதும் மிக முக்கியமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பொலிஸார், நாம் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம். இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை புகைத்தல், மதுபான பாவனை தொடர்பாக 302 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குடிபோதையில் சாரத்தியம் மேற்கொண்டவர்கள் 56 பேரை கைது செய்துள்ளோம்.

அத்துடன் வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக 26 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நாம் இந்த விடயங்கள் தொடர்பில் கவனத்தில் நிறுத்தி செயற்படுவோம். அதற்கு ஏனைய அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் ஆகும் என மேலும் சுட்டிக்காட்டியிருந்தனர். (மு-9)

## ஆமைகளுடன்...

காலை 7.00 மணியளவில் மாதகல் தம்ப கொலபடுன சிவன் கோவிலிற்கு அருகாமையில் வைத்து இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும தெரிய வருவதாவது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த இளவாலை பொலிஸார் ஆமைகளுடன் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்த நபரை விசாரணை செய்த போது சுழிபுரத்தை சேர்ந்த 40 வயது உடைய மேற்படி நபர் தொழில் செய்துவருபவர் என தெரியவந்ததை தொடர்ந்து இன்றைய தினம் மல்லாக நீதிவான் நீதிமன்றில் ஆமைகளுடன் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-104)

## இளைஞன் உயிரிழப்பு...

வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் 1 ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பை சேர்ந்த தேவராசா நிசாந்தன் (வயது 25) என்பவரே உயிரிழந்துள்ளார்

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-281,310)

(இது தொடர்பில் முன்னர் வந்த செய்தி உள்ளே...)

## இராணுவ வீரர்...

காக வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.(மு-281,310)

## தாயும் மகனும்...

அளவில் மானிப்பாய் கட்டுடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தினைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கனேஸ்வரி (வயது 39) விக்னேஸ்வரன் துஷ்யந்தன் என்பவர்களே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இது தொடர்பில் வாள்வெட்டு நடத்தியவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

# யாழ்.பாடசாலை மாணவர்களிடையே கஞ்சா பாவனை அதிகரிப்பு

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே கஞ்சா பாவனை அதிகரித்துள்ளதாகவும், அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு போதிய முயற்சிகள் எவரும் எடுப்பதில்லை என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் பாடசாலை வளாகத்தின் உள்ளேயே கஞ்சா பாவிக்கின்ற நிலைக்கு வந்து விட்டார்கள். இது மிகவும் வேதனைக்குரியதும் அதிர்ச்சிக்குரியதுமாகும்.

ஆனால் இதற்கு சரியான தீர்வை எவரும் முன்னிறுத்தாமல் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் எடுக்காமல் செயற்படுகின்றனர். அதாவது கஞ்சா பாவித்தால் உடனடியாக பாடசாலை அதிபர் அந்த மாணவனை பாடசாலையை விட்டு இடைநிறுத்துகிறார். இதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது.

மேலும் மாணவர்களுக்கு எங்கிருந்து இந்த போதைப் பொருட்கள் கிடைக்கின்றன என்பதை இதுவரை பொலிஸார் கண்டுபிடிக்கவும் இல்லை. ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கவும் இல்லை.

மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சினையை கதைப்பதில் பயன் இல்லை. ஆக்கபூர்வமான செயற்பாடுகள் அவசியம் ஆகும்.

மேலும் கோட்டை மற்றும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் என்பவற்றில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஆனால் பொலிஸார் இது தொடர்பில் கண்டு கொள்வதாக தெரியவில்லை.

பொலிஸ் காவலரண அமைக்குமாறு கேட்டிருந்தும் இதுவரை நடைபெறவில்லை. பொலிஸாருக்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் என்ன தடைகள் உள்ளன என எமக்கு தெரியவில்லை. ஆனால் இந்த விடயம் கவனிப்பாரற்று பாரிய சமூக பின்னடைவுக்கு எம் இளையவர்களை இட்டுச் செல்கிறது என குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதற்குப் பதில் அளித்த பொலிஸார், தாம் மட்டும் அனைத்து காரியங்களையும் கண்காணிக்க முடியாது. பிள்ளைகளை பக்குவமாக வளர்க்கும் கடமை முதலில் பெற்றோருக்கு உள்ளது. அதன் பின்னர் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு உள்ளது. அவர்கள் தான் மாணவர்களை கண்காணிக்க வேண்டும்.

நாம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு தான் உள்ளோம். அனைத்து பிரச்சினைகளுக்கும் பொலிஸாரை குற்றம் சொல்ல வேண்டாம். இந்த வருடம் கஞ்சாவுடன் சம்பந்தப்பட்ட 238 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எமது கடமையை நாம் செய்கிறோம். பிள்ளைகளை நன்நடத்தையின் படி வளர்ப்பது பெற்றோரின் கடமை என மேலும் தெரிவித்தனர். (மு-9)

# இராணுவ வாகனம் மோதி குடும்பப் பெண் படுகாயம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரை இராணுவ வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் வீதி வழியாக தனது வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவரை பின்னால் வந்த இராணுவ வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது 4 பிள்ளைகளின் தாயான 42 வயதுடைய குடும்ப பெண்னே படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-281)

## இடைக்கால...

தல் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு எழுதிய ஆய்வுக் கட்டுரையிலேயே, அரசியல் விமர்சகரும் அமெரிக்காவின் பாலிஸ்பரி பல்கலைக்கழகத்தின் மோதல் தீர்வு துறை தலைவராக கடமையாற்றிக் கொண்டிருப்பவருமான பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன் இக்கருத்தினை தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டுரையில் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால அறிக்கையில் எதிர்பார்த்ததைவிட முற்போக்கான சில ஏற்பாடுகள் பற்றி பேசப்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஒற்றையாட்சி என்பதற்கான மரபு ரீதியான வரைவிலக்கணம் மாற்றப்பட்டு பிரிக்கப்பட முடியாத நாடு என்று இலங்கை அழைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பது பாரதூரமான மாற்று நிலையாகும். அதேபோன்று செனற்சபை ஒன்று பற்றி பரவலான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இச்சபை உருவாகுமானால் தவிர்க்க முடியாதபடி இலங்கைக்கு சமஷ்டி சாயல் உருவாகிவிடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அதைவிட, தற்போது ஆளுநர் என்பவர் பாரதூரமான அதிகாரங்களை கொண்டவராக காணப்படுகின்ற நிலையில் அவரது அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றது. மாகாண அமைச்சர்களுடன் இணைந்தே அவர் கடமையாற்ற வேண்டிய நிலை உருவாக்கப்படும். இவ்வாறு பல விடயங்கள் எதிர்பார்த்ததை விட முற்போக்கானவையாக காணப்படுகின்றன.

எனினும், அறிக்கையில் பின்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள கட்சிகளின் அறிக்கைகளை பார்க்கும்போது, இடைக்கால அறிக்கை புதிய அரசியலமைப்பாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுகின்றபோது மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுமா என்கின்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

எவ்வாறாயினும், புதிய அரசியலமைப்பு ஒன்றிற்கான அடிப்படையாக தற்போதைய இடைக்கால அறிக்கை அமையுமாயின் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றது போன்ற விடயங்களுக்காக புறக்கணிக்காது தமிழ் மக்கள் நிதானமாக பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

## பௌத்த பிக்கு மீது...

புகலிடம் தேடிவந்த மியன்மார் ரோஹிங்கியா அகதிகளுக்கு எதிராக கலவரத்திலும், இனவாத செயற்பாட்டிலும் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் உட்பட இருவரையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றைய தினம் பகல் கைது செய்யப்பட்ட பின்னர் .தேரர், கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதவான் வஹாப்தீன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு-கல்கிஸை பகுதியில் ஐ.நாவின் வழிகாட்டலில் இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரோஹிங்கியா அகதிகள் 31 பேரை நாடு கடத்தும்படி வலியுறுத்தி ஒன்றுதிரண்ட கடும்போக்குவாத பிரிவினரும், பிக்குமார்களும் அமைதியின்மையில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் உள்ளிட்ட பிக்குகள் குழுவினர் கற்களை வீசி குறித்த இல்லத்திற்கு சேதம் ஏற்படுத்தியதோடு, ரோஹிங்கியா அகதிகள் சிலரை தாக்குவதற்கு முயன்ற காணொளிகளும் ஊடகங்களில் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து பல அமைப்புக்களில் இருந்தும் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு குவிந்ததை தொடர்ந்து, இதில் சம்பந்தப்பட்டவர்களில் ஐவர் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர், கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டது டன் விசாரணையின் நிறைவில் அவர் உட்பட மேலுமொருவர் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இருவரும் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட சிங்கள ராவய அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் மெடில்லே பஞ்ஞாலோக தேரர், பௌத்த பிக்குகளின் உரிமைகளை நல்லாட்சி அரசாங்கம் பறித்து வரும் செயற்பாடுகளுக்கு எதிராக சமூகத்தில் ஏற்படும் கலவரங்களை எவராலும் தடுக்க முடியாது என்று எச்சரித்தார். (மு-11)

## ஹெரோயினுடன்...

கிராம் ஹெராயினை தமது உடைமையில் வைத்திருந்துள்ளனர்.

குறித்த விடயம் மானிப்பாய் பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் உடனடியாக அவர்களை கைது செய்ததுடன், அவர்கள் உடைமையில் வைத்திருந்த ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் நால்வரும் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (மு-9)

## "புதிய அரசியலமை...

பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் தீ வைத்துத் தடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுக்கை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (மு-11)

## கொக்காவில் விபத்து...

துள்ளார்.

விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வாந்துறை
...ளை நூலகம்




## உடனடி வேலை வாய்ப்பு
## V2 TRAVELS

(C-9818)
UK-550/=Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/= (பயிற்சியின் போது) // 15,000/= (பயிற்சியின் பின்னர்)
நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241


## களப்பணியாளர்கள் தேவை

அரச சார்பற்ற நிறுவனத்தின் செயற்றிட்டங்களில் குறைந்தது 3 வருடங்கள் பணியாற்றிய அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

விண்ணப்பங்கள் E-mail : senthu@eureka.lk அல்லது SOND, 18/10 வைமன் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு 10.10.2017க்கு முன்னர் அனுப்பவும்.

(869)


## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(436)



## TECHNO WORLD
## A/L தொழில்நுட்ப பிரிவு

SFT - S.சக்தி, ராகவன்
E.Tec - Mr.அருண்குமார், சேரலாதன்
B.Tec - Mr.திருக்குமரன்

- A/L 2019
  SFT - விசை
  (திங்கள், வெள்ளி - 3.30-5.00 pm)
  E.Tec - இயந்திரவியல்
  (செவ்வாய், வியாழன் - 3.30-5.00pm)
  Bio Tec - நில அளவை, மட்பங்காணல்
  (செவ்வாய், வியாழன் - 3.30 - 5.00 pm)
- A/L 2018
  SFT - பொறிமுறை சக்தி
  (செவ்வாய், வியாழன் - 3.30-5.00 pm)
  E.Tec - இலத்திரனியல்
  (திங்கள், வெள்ளி - 3.30-5.00pm)
  Bio Tec - நாற்றுக்கள் உற்பத்தி
  (திங்கள், வெள்ளி - 3.30-5.00 pm)

Paper Class அனுமதி இலவசம்
இடம்:
உயர்கலைக்கல்லூரி
(கொக்குவில், குளப்பிட்டிச்சந்தி.)
Techno World
(வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.)
ஆரம்பம்: 03.10.2017
தொடர்பு : 0770175346
"கல்வியே கண்கள்" (C-9851)


## லாஸ் வெகாஸில்...

ஐக்கிய அமெரிக்காவின் நெவாடா மாநிலத்திலுள்ள லாஸ் வெகாஸ் நகரில், இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், குறைந்தது 50 பேர் பலியானதோடு, 200க்கும் மேற்பட்டோர் காயமடைநதனர். இதன் பின்னர், குறித்த தாக்குதலை மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர், பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர், லாஸ் வெகாஸைச் சேர்ந்த உளளூர் நபர் போன்று காணப்பட்டார் என்று தெரிவித்த பொலிஸார், அவர் தனித்தே செயற்பட்டார் என்றும் குறிப்பிட்டனர். ஆனால், குறித்த நபரோடு வந்த அவரது ஆசியப் பெண் குறித்து, மேலதிக தகவல்களை, பொலிஸார் தேடிவருகின்றனர்.

லாஸ் வெகாஸில் இடம்பெற்று வந்த இசை நிகழ்ச்சியொன்றில், இலங்கை நேரப்படி நேற்று முனதினம் முற்பகல் 11:15 மணியளவில், இச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (மு-11)

## தவறவிடப்பட்டது

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாக கொண்ட கந்தையா திருநாவுக்கரசு ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (473002337V) மற்றும் முக்கிய ஆவணங்களுடன் கூடிய கைப்பை ஒன்று முல்லைத்தீவு - வட்டக்கச்சி வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P : 077 305 8320
021 321 1770
(870)

## வேலையாள் தேவை

கணேசன் மோட்டர்ஸ் நெல்லியடி விற்பனை பிரதிநிதிக்கு வேலையாள் தேவை.

A1 சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு : 0774651277, 021 226 1552
(C-9847)


## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9818)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS - 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்
## பதவி வெற்றிடம்

| | | |
|---|---|---|
| பதவி நிலை | : | ஆலய முகாமையாளர் (நிர்வாகி) |
| கடமை | : | தர்மகர்த்தா சபையின் தீர்மானங்கள், அறிவுறுத்தல்களுக்கு அமைய ஆலயத்தை நிர்வகித்தல் மற்றும் அன்றாட செயற்பாடுகளை கவனித்தல். |
| தகைமைகள் | : | * வயதெல்லை :- 40 - 60<br>* சைவ போசனம் உடையவராக இருத்தல்<br>* நிர்வாகத்துறையில் முன் அனுபவம்<br>* ஆலயத்திலிருந்து 3 Km சுற்றாடலில் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது. |

தகுதியுடையோர் தமது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பக்கடிதங்களை 18.10.2017 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு : தலைவர் / செயலாளர், தர்மகர்த்தா சபை - சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை - மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர் : தர்மகர்த்தா சபை,
சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்.

(C-9844)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆசான்

## Dr. ம. கணேசரட்ணம்

சத்திரசிகிச்சை நிபுணர் நேற்று இறைபதமடைந்தார்.

நாளாந்தம் மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள்.
சிலர் மட்டுமே மற்றவர்களின் வாழ்வை வளமாக்குகிறார்கள்.
அவர்களை மட்டுமே உலகம் மறப்பதில்லை.

உங்கள் வழிகாட்டலில் வந்தவர்கள் – நாம்
உங்களை ஒருபோதும் மறப்பதற்கில்லை.

"யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்களின் அமையம்

(875)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை ஆச்சிப்பிள்ளை



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத் துரை ஆச்சிப்பிள்ளை அவர்கள் 02.10.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நல்லபிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு லட்சுமிப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், இராசலட்சுமி, குணலட்சுமி (நோர்வே), பத்மநாதன் (நில அளவைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), சிவநேசன் (லண்டன்), குலேந்திரராசா (குலம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பற்பனா சிங்கம், முருகானந்தன், சிவஜனி, கலாநாயகி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதரன், புவிதா, கீத்தா, ஆதீபன், பார்த்தீபன், ஜெயதீபன், அற்புதன், தாமரை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.10.2017 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்

தகவல்:-
குடும்பத்தினர்

(868)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.